உ

தமிழ்த்திருநங்கை வாழ்க.

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு.

பிரசோற்பத்தி ஆண்டு.

(1931—32)

ஏழாந் துணர்.

பொழிற்றொண்டர்,

திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்

திரு. R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள்.

தஞ்சைக்

கரந்தைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்

அச்சிடப்பெற்றது.

கட்டுரையெழுதிய பேரறிஞர்களும், கட்டுரைகளும்.

பொழிற்றொண்டர்

முன்னுரை : 1

சங்கநிகழ்ச்சிகள்; திருமணநிகழ்ச்சிகள் மலர் உ, ந புறவேடு

க. த. சங்கத்திற்கு நன்கொடைகள் மலர் க புறவேடு

மதிப்புரை முதலியன 47

மாணிக்கநாயக்கரவர்கள் காலஞ்சென்றது மலர் ம புறவேடு

பொங்கற் புது மலர் ,,

இராவ்பகதூர் A. T. பன்னீர்ச்செல்வம் Bar-at-law

[அவர்கட்கு வரவேற்பு வாழ்த்து, மலர் ம புறவேடு

வீ. உலகவூழியன் அவர்கள் சங்க அமைச்சன்

ஒரு தமிழ்ச்சங்கத் திறப்பு மலர் கூ புறவேடு

S. K. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள், M. A.,

சோழர் பேரரசு 3, 114

சிதம்பரம் கல்வெட்டுக்கள் 501

ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்

தமிழ்நாடும் தமிழ்நாட்டு வழக்கவொழுக்கங்களும் 17

சொல்லதிகார ஆராய்ச்சிக் குறிப்புரையும் மறுப்பும் 145,

[193, 221, 253, 313, 433, 524, 562

மிருச்சகடி 398

ஆசிரியர், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்

பண்டைக்காலப் பாவலரும் காவலரும் 29, 240, 419

வித்துவான், ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்

பரணர் 43, 121, 259, 279

பொருண்மொழி 337

சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A. L. T.

மூவர் தமிழ் 49, 137

உடல் இயலும் உடல் நல வழியும் 83

பண்டிதர், அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்
ஓர் வழக்கிடு 57
நான்மொழி நாடு 233
வேழக்கரும்பு 273
கோளறு திருப்பதிகம் 379
கரிய அன்னப் பறவை 529
க. சம்பந்தம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
தொடக்கக்கல்வி 73
M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
கோளறு பதிகம் 119
தெளிபொருள் வேண்டுகோள் 120
A. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள், B. A., L. T.,
ஒளியென்பது யாது 213, ஒளியலைகள் 494
T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்
கல்வெட்டுக்கள் 296
பாண்டியர் வரலாறு 367
காளமேகப்புலவரது காலம் 536
சில செய்திகள் 548
R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்
ஆழ்ந்தநோக்கம் யாண்டையது ! 303
அழுமூஞ்சிச் செல்லையா 457
T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
பையன் 333
வை. சுந்தரேச வாண்டையாரவர்கள்
சைவமும் தமிழிலக்கியமும் 349
இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்
கல்வி நிலை 353, 513, 553
பண்டிதர், R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள்
கம்பர் உவமைக்கலின் 387, 539
திருக்குறளும் கம்பரும் 4
G. சுப்பையா அவர்கள்
'சைவமுந் தமிழிலக்கியமும்' பற்றிய ஐயவுரை 5
வித்துவான், P. S. வேதாசலய்யரவர்கள்
சொல்லதிகாரவாராய்ச்சி மறுப்பின் மறுப்பு

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் எ	பிரசோற்பத்தி, சித்திரை	மலர் க

முன்னுரை.

நமது பொழிலின் ஏழாந்துணரது முதலிதழ் இன்று வெளி வருகின்றது. தமிழன்பர் ஒவ்வொருவரும் அருள்கூர்ந்து பெற்று இன்புற்றுப் புரந்து வருவார்களாக. பொழில் இன்னும் வளம் பெற நடைபெற வேண்டுமெனும் அவாவுற்ற தமிழன்பர் சிலர், இது, திங்கடோறும் இன்னும் ஒரு 'பாரம்' (அ பக்கம்) அதிக மாகக் கொண்டு வெளிவரவேண்டுமென்றும், புறவிதழ் (அட்டை) பளபளப்பான உயர்ந்த தாளில் ஓவிய நலம்பெற்றுத் திகழ வேண்டுமென்றுங் கூறினர். இதுபோதே போதிய அளவு உறுப்பினரின்றி வருவாயினும் மிக்க செலவில் இது நடந்து வருவதனைப் பொழிலன்பர்கள் அறிவர். என்றாலும், மேற்கூறிய அன்பர்கள் உரையினையும் ஏற்று இவ்விதழினை ஆறு பாரமாக்கி வெளியிட்டுள்ளேம். புறவிதழ் ஓவியத்துறையினர்பக்கல் வேலையிலிருந்து வருகின்றது; முடிந்து வந்தவுடன் மேற்கூறிய நலங்கள் திகழ வெளிவரும்.

அரிய பெரிய தமிழாராய்ச்சிகளைக் கொண்டு செம்மையான தமிழ் நடையில் வெளிவரும் உயர்தரத் தமிழிதழ்கள் இத்தமிழ் நாட்டில் மிகப் பல இல. இத்தகைய இதழ்களால் ஒருமொழி சிறப்புறுமேயன்றி, வேறெவற்றாலும் சிறப்புறுதல் ஒருபோதும் இல்லை. இவ்வுண்மையினை உணர்ந்த மேனாட்டினர், மொழிச் சிறப்பிற்கேதுவாய உயர்தரத் திங்கள், வார இதழ்களை,

'செய்தித்தாள்கள்' போல நூற்றுக்கணக்கிற் போற்றி வருகின்றனர். நம் நாட்டிலோ தனிச் செல்வர்கள் மட்டுமல்லர்; கல்வி நலனுமுற்ற செல்வர்களும் இத்தகைய இதழ்களைப் புறக்கணிக்கின்றனர். சங்கத்தில் இத்தமிழ்ப் பொழிலை நடாத்த வேண்டுமெனப் பல்லாண்டுகள் வற்புறுத்தித் தொடங்கச் செய்த சங்க உறுப்பினர்களுட் பலரே, இவ்விதழைத் தாமும் பெற்றுத் தம் நண்பர்களைப் பெறுமாறு செய்வித்துத் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்ய மனங்கொண்டிலராயின், வேறு பிறரைக் கூறுவதிற் பயனென்னை? சங்க உறுப்பினராக, பிறராக, தமிழன்பர்களாவார் ஒவ்வொருவரும் இவ்விதழைப் புரக்க இனியேனும் முன்வருவார்களாக.

கட்டுரை யெழுதும் பேரறிஞர்களின் இடையறாப் பேரருளாலே, நம்பொழில் வெளிவந்துகொண்டிருத்தலின், அன்னோரே நம் பொழிலின் உயிர்நிலையாவார். இவர்கட்கு நம் சங்கம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து இவர்களை வாழ்த்து கின்றது. வழக்கம்போல் இந்த ஆண்டிலும் இனிவரும் ஆண்டு களிலும் இடையறாது கட்டுரைகள் தந்து பொழிலை வளம்படுத்தி வருமாறு தமிழ்ப் பேரறிஞர்கள் ஒவ்வொருவரையும் மிகமிகப் போற்றி வேண்டி நிற்கின்றோம்.

நமது பொழிலில் மதிப்புரை யெழுதவேண்டி யனுப்பிய நூல்களை முழுவதும் பார்த்துத் தக்கவாறு ஆராய்ச்சியுரைகள் வெளியிடுவதற்கு வேண்டும் இயல்புகள் இதுகாறும் எய்தாமை யின், அவ்வேலை இதுகாறும் செவ்விதின் நடைபெற்றுவரவில்லை. இவ்வேழாம் துணரிலிருந்தே அவ்வேலையையுந்தொடங்கியுளேம். முன்னரே வந்துள்ள நூல்கட்கு இத்துணைக் காலந்தாழ்த்து இனி மதிப்புரை யெழுதிக்கொண்டிருப்பது சிறப்பாக விரா தாகலின், இனி அவ்வத் திங்களில் வந்துறும் நூல்கட்கே அவ் வப்போது மதிப்புரைகள் எழுதப்படும். இம்முறைபற்றி, இச் சித்திரைத் திங்களில் இதுவரை வந்தெய்திய நூல்கள் இரண்டு மூன்றிற்கு இதன்கண் ஈற்றில் மதிப்புரைகள் எழுதப் பெற்றி ருக்கின்றன. முன்னரே நூலனுப்பியுள அன்பர்கள், பொறுத் தருள்வார்களாக.

பொழிற்றொண்டர், வே.

சோழர் பேரரசு.

முதலாம் அதிகாரம் — அடிகோலல்

திரு. S. K. கோவிந்தசாமி அவர்கள், M. A.,
சரித்திர ஆசிரியர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

"பல் கொடி
" தாழ மேருவி னுயர்ந்த செம்பியர்
" தனிகப் புலிக்கொடி தழைக்கவே"
(கலிங்கத்துப்பரணி.)

i. பேரரசின் காலம்.

பாண்டியரும் பாணரும், சேரரும், சிங்களரும், கங்கரும் கொங்கரும், கலிங்கரும், சளுக்கியரும், தத்தம் தனியரசை இழந்து சோழர் ஆணைக்குள் அடங்கின காலமே அவர் பேரரசு தென் இந்தியாவில் நிலைபெற்றுப் பொலிவுற்ற காலமெனலாம். இப்பேரரசு சற்றேறக்குறைய இருநூறு யாண்டுகள் நீடித்திருந்தது: அதாவது "மதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரி பன்மரான" முதலாம் பராந்தகன் ஆட்சி தொடங்கிக் (கி. பி. 907)(1)* கீழைச்சளுக்கியர் வழித்தோன்றலான முதலாம் குலோத்துங்கன் ஆட்சி முடியவாம். (கி. பி. 1120)(2) அவன் காலத்திலேயே சோழ அரச வாழ்வுக்கு அழிவு கிட்டிற்றென்பதற்கு ஒரு முன் எச்சரிக்கையாக, கி. பி. 1116 ல் கங்கப்பாடியின் தலைநகரான தலக்காடு, போசள மன்னன் பித்திதேவன் என்ற விஷ்ணுவர்த்தனுல் சோழரிடமிருந்து கவரப்பட்டு, கங்கப்பாடியும் மைசூர்ச் சீமையோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.(3) இவ்வண்ணமாகச் சோழர் சிறப்பும் ஆற்றலும் சிறிது சிறிதாகத் தேய்ந்திட, மூன்றும் இராசேந்திரன் காலத்தில் (கி. பி. 1246-1268) தென்னவனுய் அரசாண்ட இரண்டாம் சடாவர்மன்

* அடிக்குறிப்புக்கள், இக்கட்டுரையின் இறுதியில் ஒருங்கே யுள்ளன.

சுந்தரபாண்டியனால் அவை அடியோடு அழிக்கப்பட்டன.(4) சக்ரவர்த்திகளாய் வாழ்ந்த சோழரும் பாண்டியரின் கீழ் "மகா மண்டலேஸ்வரர்"(5) ஆனார்கள். மேற்குறித்தபடி, சோழர் பேரரசு பிறந்து வளர்ந்து சிறப்பெய்திச் சீர்குலைந்தவரலாற்றையே யான் இவண் எழுதத் துணிந்தேன்.

ii. விஜயாலயன் வருகை.

விஜயாலயன் என்ற பெயர்புனைந்த சோழமன்னனே இப் பேரரசுக்கு அடிகோலினவன். அவனுக்குப் பரகேசரி என்ற பட்டமும் உண்டென்பது அவன் கல்வெட்டுகளால் அறியக்கிடக்கிறது. தென் இந்திய சரித்திர ஆராய்ச்சிக்கு ஓர் இருட்டறை விளக்கம் போன்ற திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயம் விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அதைச் சோழர் தலை நகராகச்செய்து கொண்டான் என்று சொல்லாநிற்க,(6) வீரராசேந்திரனுடைய கன்னியாகுமரிக் கல்வெட்டோ "தக்க வாழ்க்கை நலன் மலிந்த, பூவில் அயனும் புகழப்பெற்ற தஞ்சாபுரி என்ற ஒரு அழகிய நகரை விஜயாலயன் புதிதாகக் கட்டுவித்தான்"(7) என்று முன் சொன்னதற்கு முரண்படக்கூறும். ஆனால் பின் சொன்னது ஒரு பொருந்தாக்கூற்று. ஏனெனில் விஜயாலயன் காலத்துக்குப் பலயாண்டுகளுக்கு முன்பே தஞ்சாவூர் சிறந்ததோர் பட்டினமாய் இருந்ததென்பதற்குச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய "தில்லை வாழந்தணர்" என்னும் திருப்பதிகத்தில் தோன்றும் "தஞ்சை மன்னவனாஞ் செருத்துணை" என்ற சொற்றொடரே தக்க சான்றாம். அதன்றியும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட செந்தலைக் கல்வெட்டுகளும் இதையே மேலும் வலியுறுத்தும்.(8) ஆகவே விசயாலயன் தஞ்சையை மாற்றான் ஒருவனிடமிருந்து வலிந்து பற்றிக்கொண்டான் என்பது மாத்திரம் உண்மை. எனினும் அம்மாற்றான் யாவனென்று திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயம் கூறிற்றில்லை. இனி விஜயாலயன்தான் யார், அவனுக்கும் பண்டைத் தமிழ் இலக்கிய காலச் சோழ வேந்தருக்கும் எவ்வகையான உறவு, தஞ்சையைப் பிடிப்பதற்கு முன் அவனுடைய பதவி யாது என்று இயற்கையாகவே எழும் வினாக்களுக்கு முடிவான

விடை அளிப்பதற்குப் போதிய சான்றுகள் இன்னும் கிடைத்தில. இக்காரணத்தைக்கொண்டு சிலர் விஜயாலயனுக்கும் அவன் வழிவந்த ஏனைய சோழ அரசருக்கும், கரிகாற்பெருவளத்தான், கிள்ளிவளவன், கோச்செங்கண்ணன் முதலிய பழைய சோழருக்கும் யாதொரு தொடர்பும் இருந்திருக்க முடியாதென்று ஐயப்பாடு அடைகிறார்கள். ஆனால் ஆனைமங்கலம் பெரும்பட்டயத்திலும், சுந்தரசோழன் தந்த அன்பில் பட்டயத்திலும், கன்னியாகுமரிக் கல்வெட்டிலும், பழஞ்சோழமன்னர் பெயர்கள் பல கற்பனைப் பெயர்களோடு கலந்து ஆங்காங்குக் காணப்படுவதால், விஜயாலயன் மரபினர் அவர்களைத் தம் முன்னோர் என்று கருதி இருந்தார்கள் என்பது தேற்றமாகப் புலப்படும். ஆகவே விஜயாலயன் புதிதாய் முளைத்த போலிச் சோழனல்லவாம்.

iii. விஜயாலயனுக்கு முன் சோழர் வரலாறு.

விஜயாலயனுக்கு முன்னிருந்த சோழரின் நிலைமையைப் பற்றிச் சில தப்புக்கொள்கைகள் வழங்கிவருகின்றன. அவற்றில் சிறப்பாகக் கரிகாலனுக்கும் விஜயாலயனுக்கும் இடைப்பட்டகாலத்தில் சோழர் பொன்னி நாடெனும் தம் நாட்டை எக்காரணத்தாலோ விட்டகன்று கடப்பை சில்லாவில் எங்கேயோ ஒரு பாகத்தில் குறுநில மன்னராய் "அஞ்ஞாதவாசம்" செய்தார்கள் என்பது சில சரித்திர ஆராய்ச்சியாளர் துணிபு.(9) இதற்கு ஆதாரமாய் அவர் கொண்ட சான்றுகள் கீழ்வருமாறு. ஹியுந்தசாங் (Hieuen Tsang) என்ற புகழ்பெற்ற சின வழிப்போக்கன் காஞ்சிபுரத்துக்கு வடமேற்கில் "சுளியே" என்ற ஓர் நாடு உண்டு என்று கண்ட குறிப்பு ஒன்று. கடப்பைச்சீமையில் கிடைக்கும் "தெலுங்க சோடர்" என்னும் சிற்றரசர்களின் கல்வெட்டுகளில் "பொன்னிக்கரை கண்ட கரிகாலன்" என்ற பெயர் அவர் தம் முன்னோர் பெயர்களில் ஒன்றாகக் காணப்படுதல் இரண்டு. ஆனால் சோழர் ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டிலுங்கூட,பொன்னிநன்னாடெனப்பட்ட தற்போதைய தஞ்சாவூர் சில்லாவிலேயே ஒருபால் வதிந்திருந்தனர்என்பதைப் பல்லவர், பாண்டியர், மேலைச்சளுக்கியர், இராட்டிரகூடர் முதலியோர் சாசனங்கள் ஐயந்திரிபு அற வலியுறுத்தும்.(10)

ஆகவே மேற்கூறின சீன வழிப்போக்கன் கூற்றுக்கொள்ளற்பாலதன்று என்பது ஒருதலை.(11)

காரிகாலன்(12) வெண்ணி, கழுமலம், குருமி முதலான போர்க்களங்களில் வேற்றரசரை வென்று உறந்தையின்கண்ணும் புகாரிலும் இயங்கிய புலிக்கொடியைக் காஞ்சிபுரத்திலும் அதற்கப்பாலுமுள்ள வடுகர் நாட்டிலும்(13) நாட்டிப் பேரரசு நடாத்திய பின்னர், சோழர் திரு, குன்றத் தொடங்கிற்று; அவர் குடும்பம் பிளவுபட்டது. தாயத்தாருள் ஓயாப்போர் விளைந்தது.(14) பொருள் மலிந்த புகார்ப்பட்டினம் கடல் வாய்ப்பட்டு அழிந்தது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது என்ற வாசகத்திற்கிணங்க, களப்பாளர்(15) என்ற ஓர் கூட்டத்தார் தமிழ் அகத்தில் புகுந்து, முடியுடை வேந்தர் மூவரையும் முறியடித்து, அவர் நாடுகளைக் கொள்ளைகொண்டு, ஆங்குத் தம் ஆட்சியை சிலகாலம் நிறுவினர். பின்னர் ஆறும் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர் அரசு மீண்டும்தலையெடுக்க, கடுங்கோன் களப்பாளரைத் தன்னாட்டைவிட்டுத்துரத்தித் "தரணி மங்கையைப் பிறர்பால் உரிமைத்திரவிதின் நீக்கித் தன்பாலுரிமை நன்கென அமைத்த"னன்.(16) அதேபோது பல்லவமன்னனான சிம்ம விஷ்ணுவும் களப்பாளரைத் தொண்டை மண்டலத்தினின்றும் விரட்டினன். சோழர் மாத்திரம் இச்சமயத்திலும் எழுந்தாரில்லை. களப்பாளர் ஆட்சி கழிய அவர் இப்போது பல்லவர் பாண்டியர் ஆட்சியின் கீழ்ப்பட்டார். ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் சோழநாட்டின் பெரும்பாகம் பல்லவ அரசனான மகேந்திரனால் கவரப்பட்டது. சோழரும் புதிதாய் எழுந்த பாண்டியப் பேரரசின் பாதுகாப்பில் சிறிது காலம் இருந்து வந்தனர். இன்னும் அவர் பாண்டியரோடு கொண்டுங் கொடுத்தும் உறவாடியும் வந்ததாகத் தெரிகிறது. இக்காலத்தில் பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடைவிடாது நடந்த போரில் சோழர் அனேகமாகப் பாண்டியர்பாலே சேர்ந்து அணைபுரிந்ததாகக் கருதப்படுகிறது. சுருங்கச் சொல்லுமிடத்து இக்காலத்திய சோழர் நிலைமை இராட்டிரகூடர் ஆட்சியின்கீழ் மேலைச்சளுக்கியர் நிலைமையையும் பிற்காலத்திய சோழர்

பேரரசின்கீழ் பாண்டியர் பதவியையும் ஒக்கும் எனலாம். ஆனால் சோழர் இந்நூற்றாண்டுகளில் அரசியற் றுறையில் பொலிவிழந்து மெலிவுற்றிருந்தாலும் சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வந்ததாகப் பெரிய புராணம் என்ற நூலால் அறியக்கிடக்கிறது.(17)

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் தென்னிந்தியாவின் அரசியல் நிலைமை.

விஜயாலயன் தஞ்சையைப் பிடித்துத் தன் தலைநகராக அதைச் செய்தான் என்று நான் முன்னமே கூறினேன். அந் நிகழ்ச்சி சுமார் கி. பி. 846ல் நடைபெற்றிருக்கவேண்டும். அவ் வினையின் பயனைச் செவ்வனே அறிவதற்கு அந்நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னிந்தியாவின் அரசாங்க நிலைமை எப்படி இருந்தது என்று விசாரிப்பது இன்றியமையாததாகும். தமிழ் அகத்தின் வடபால் பல்லவரும் தென்பால் பாண்டியரும் மிகத் திறமாக ஆட்சிபுரிந்து வந்தனர். பல யாண்டுகளாக இவ்விரு திறத்தாருக்கும் மாளாப்பகையால் மீளாப்போர் நடந்தது. பாண்டியரிராச்சியம் வடக்குநோக்கி விரிய, பல்லவரிராச்சியம் அதேகாலத்தில் தெற்கு நோக்கி விரிந்ததால் இரண்டின் எல்லை களும் ஒன்றோடு ஒன்று மோதின. கி. பி. 765ல் இருந்து கி. பி. 815 வரையில் செங்கோலோச்சிய சடிலன், பராந்தகன், மாறன்சடையன் முதலான பெயர்களைப் புனைந்த பாண்டிய மன்னன் ஒருவன் மற்றெல்லோரையும்விடப் பலபடி உயர்ந்தவன் என்றும், அவன் காலத்தில் பாண்டியர் அரசு இக்காலத்திய திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்பத்தூர் ஜில்லாக் களிலும் அதற்கப்பாலும் பரவி இருந்ததென்றும் பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்றனர்.(18) மாறன் சடையனுக்கு நேராகக் காஞ்சியில் ஆண்ட பல்லவ அரசன் நந்தி வர்ம போத்தரையனென்பான் (கி. பி. 777-830). இவன் ஆட்சியில் முன்னமே உள்நாட்டுக் கலகத்தால் அலைப்புண்டிருந்த பல்லவ நாட்டை கி. பி. 804ல் இராட்டிரகூட அரசனான மூன்றாம் கோவிந்தன் என்பான் படையெடுத்து, நந்திவர்மனைக் கப்பம் கொடுக்குமாறு நெருக்கினான்.(19) பின்னர்க் கூறின அரசன்

கி. பி. 830ல் இறந்துபட நந்திவர்மன் பல்லவமன்னன் காஞ்சியில் அரசுகட்டில் ஏறினன். அதே சமயத்தில் பாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் (கி. பி. 815-862) என்பான் இலங்கை வேந்தன் முதலாம் சேனனை (கி. பி. 822-842)(20) முறியடித்த மமதையால் பல்லவர் நாட்டுட் புகுந்து நந்திவர்மனையும் எதிர்த்தான். சோழரும் அவ்வமயம் பாண்டியர்க்குத் துணை புரிந்தார்போலும். தெள்ளாற்றில் நடந்த கடும் போரில் நந்திவர்மன் "செம்பியர் தென்னவர் சேரர் எதிர்வந்து பாயச் செரு வென்றான்".(21) இச் சண்டைக்குப்பின் நந்திவர்மன் பலம் குன்றியது. கங்க அரசனை முதலாம் நீதிமார்க்கன் (கி. பி. 830-860) பல்லவரை எதிர்த்து வென்றதாகக் கூறிக்கொள்ளு கிறான்.(22) நந்திவர்மனுடைய கடைசிக்காலத்தில் பாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லவன் மறுபடியும் பல்லவர் சேனையைக் குடமூக்கில் என்றவிடத்தில் தோற்கடித்தான்.(23) ஆனல் அதே சமயத்தில் பாண்டிய நாட்டைச் சிங்களர் அரசனை இரண்டாம் சேனன் (கி. பி. 842-877) என்பான் படையெடுத்து "மாயப் பாண்டியன்" ஒருவனை அரியணையில் ஏற்ற,(24) ஸ்ரீமாறன் அச்செய்தி அறிந்து பரபரப்போடு மதுரையை நோக்கி மீண்டான். இங்ஙனம் பாண்டியரும் பல்லவரும் ஒருவரால் ஒருவர் நெருக்குண்டு தேய்ந்த அற்றம் நோக்கி இதுகாறும் பேழையுளிருக்கும் பாம்பெனக்கிடந்த விஜயாலயன் சரேலென்று கிளம்பித் தஞ்சையைக் கைப்பற்றிக்கொண்டான்.

முத்தரையரும் விஜயாலயனும்.

விஜயாலயன் தஞ்சையை யாரிடமிருந்து கவர்ந்துகொண் டிருக்கவேண்டும் என்று பார்ப்போம். ஒருக்கால் பாண்டியர் பாலிருந்து கொள்ளைகொண்டனனு? திருவாளர் வெங்கையா அவர்களின் கருத்து அதுதான்.(25) ஆனல் இது ஏற்றுக் கொள்ளற்பாலதன்று. ஏனெனின் பாண்டியர் சேனையோடு தனியே எதிர்த்து மன்றுடப் போதிய ஆற்றல் அத்தருவாயில் விஜயாலயனுக்கு இருந்திருக்க முடியாது. ஆகவே முத்தரையர் மரபைச் சேர்ந்த ஓர் சிற்றரசர் கையினின்றுதான் தஞ்சை பிரிக்கப்பட்டு இருக்கவேண்டும் என்று சில சிறந்த ஏதுக்களால்

யூகிக்கப்படுகிறது. முத்தரையர் ஒரு பழங்குடி மக்கள். நாலடியாரில் "பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும்" என்றும், "நல்கூர்ந்த கண்ணும் பெருமுத் தரையரே" என்றும் அவருடைய வரையாது ஈயும் வள்ளன்மை புலவரால் பெரிதும் பாராட்டப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் அதாவது கி. பி. எட்டாம் நூற்றாண்டில் முத்தரையர் பல்லவர் ஆட்சியின்கீழ் அடங்கித் தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் இடைப்பட்ட ஒரு சிறு நிலப்பரப்பைக் காத்துவந்ததாக அவர்களுடைய செந்தலைக் கற்றூண் கல்வெட்டுகளால் அறியக்கிடக்கிறது.(26) இப்பகுதி முத்தரையரால் ஆளப்பட்டு வந்ததென்பதற்கு அறிகுறியாக "வல்லத்தரசர், தஞ்சைராயர், செம்பியமுத்தரையர் என்னும் பட்டமுள்ள கள்ளர் குலத்தவர் தஞ்சையிலும் தஞ்சையைச் சூழ்ந்த இடங்களிலும் இப்பொழுதும் இருக்கின்றனர்" என்று பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவார்.(27) நாம் மேல் எடுத்துக்காட்டிய செந்தலைக் கல்வெட்டுகள் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொறித்தவையாகும். அவற்றில் மூன்று தலைமுறை முத்தரையரைப்பற்றியன சில சிதைந்துபோன அழகிய வெண்பாக்களில் கூறப்பட்டு இருக்கின்றன. "பனையைப் பகடு கடாயன்று பல்லவன் வெல்லத் தென்னன்—முனையைக் கெடச்சென்ற மாறன்" என்றும், "தென்னடர் காதலியர் தீநாட வாய்சிவந்த மின்னடு வேன்மாறன் மெய்" என்றும் "மறப்படை மீனவன் வல்லரண் பல்லவன் சேனைக்கன்று புறப்படுமாறு பொருகளிற்று" என்றும் அவர் பல்லவர்க்காக பாண்டியர் மேலடைந்த வெற்றி புகழப்பட்டிருக்கிறது.

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அம்முத்தரையரே தஞ்சையை ஆண்டு வந்திருக்கவேண்டும். அதேபோல் சோழரும் தஞ்சை சில்லாவின் மற்றொருபால் பழையாற்றைத் தலைநகராகக்கொண்டு பல்லவரின்கீழ் அரசுசெலுத்தி இருக்கவேண்டும். நந்திவர்மன் பல்லவமன்னன் காலத்தில் குமராங்குச சோழனென்பான் வேலூர்ப் பாளைய சாசனத்துக்கு "விஞ்ஞாபதியாக" விருந்ததாக அப்பட்டயத்தால் தெரிகிறது.(28)

அதில் குமராங்குச சோழனைச் "சோழகுலத்திலகம், என்றும், பெயர்பெற்ற போர்வீரனென்றும், கொடையில் கர்ணனென்றும்" சிறப்பித்திருப்பது நோக்கத்தக்கது. இவன் வழியில் தான் விஜயாலயன் வந்திருக்கவேண்டும். ஒருக்கால் அவன் பேரனாய் இருப்பினும் இருக்கலாம்.(29) ஆகவே விஜயாலயன் பல்லவர் பக்கம் குடமூக்கிற் போர்முனையில் சண்டை செய்திருக்கவேண்டும். முத்தரையர் அவ்வமயம் பல்லவரைத் துறந்து பாண்டியரோடு சேர்ந்துகொண்டு பல்லவரையும் சோழரையும் எதிர்த்திருக்கவேண்டும். இதற்கு ஆதாரம் முத்தரையர் பெயர் இக்காலத்தில் பாண்டியர் சாசனங்கள் சிலவற்றில் காணப்படுதலேயாம்.(30) குடமூக்கிற் சண்டை பல்லவர்க்குத் தீமையாகமுடிய விஜயாலயன் முத்தரையரை மற்றொரு சமயத்தில் வெல்லவேண்டுமென்ற அவாக்கொண்டிருக்க வேண்டும். இனி நாம் முன்னமே சொன்னதுபோல் பாண்டியநாடு சிங்களரால் படையெடுக்கப்பட, ஸ்ரீமாறன் அதைக்காப்பாற்றப்பரிந்து செல்ல, விஜயாலயனும் அதுதான் சமயம் என்று முத்தரையரைத் தாக்கித் தஞ்சையைக் கைப்பற்றிக்கொண்டான்.

விஜயாலயனுடைய ஆட்சி.

இவ்விதமாகத் தஞ்சையில் சோழஅரசை நிலைநாட்டி, அங்கு விஜயாலயன் துர்க்கைக்கு ஒரு கோயிலும் சமைத்தான். இவன் குறைந்தது முப்பத்தைந்து யாண்டுகள் செங்கோலோச்சியவனாவான்.(31) இதற்கு ஆதாரம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குற்றாலத்தில் கிடைத்த பரகேசரிவர்மனின் முப்பத்தைந்தாம் யாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டே. (44 of 1917). ஆகையால் இவன் கி. பி. 846 லிருந்து கி. பி. 881 வரையில் அரியணையில் இருந்திருக்கவேண்டும். இவனுடைய கல்வெட்டுகள் வடக்கே திருக்கோயிலூர், காஞ்சிபுரம், உக்கல் முதலான விடங்களிலும் தெற்கே திருக்கோகர்ணம், குற்றாலம், சுசீந்திரம் முதலான விடங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் இக்கல்வெட்டுகளைக்கொண்டு விஜயாலயன் காலத்திலேயே சோழர் அரசு

வடக்கே காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையில் பரவிற்றென்று சொல்லுவதற்கில்லை. இவனுடைய நீண்ட ஆட்சியில் இவன் பாண்டியர் பல்லவர் ராச்சியங்களின் சிற்சில பகுதிகளைச் சிற்சில சமயங்களில் ஊடுருவிச்சென்று கவர்ந்து கொண்டிருக்கலாம் என்றுமாத்திரமே நாம் கூறலாம்.

விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றின பின்னர் சிறிது காலம் சும்மா இருந்துவந்தான். பாண்டியன் ஸ்ரீமாறனோ சிங்களரோடும், மாயபாண்டியனோடும் சண்டை செய்துகொண்டிருந்ததால் அவன் முத்தரையருக்கு உதவிசெய்ய வரவில்லை. பாண்டிய நாட்டில் குழப்பம் ஒருவாறு அடங்கினபின் ஸ்ரீமாறன் பெருந்தானையோடு வடக்கு நோக்கிப் புறப்பட்டான். அந்தக் காலத்தில் பல்லவ அரசனாய் இருந்தவன் நிருபதுங்கன் என்பவன். அவனும் தன்சேனையோடு சோழன் விஜயாலயனுக்குத் துணைபுரியத் தெற்கு நோக்கிவந்தான். இரு சேனைகளும் அரிசிலாற்றங்கரையில் எதிர்த்துப் போர்புரிந்தன. அப்போரில் பாண்டியன் தன்சேனையோடும் முறியடிக்கப்பட்டான்.(32) இந்தச்சண்டை கி. பி. 862 க்குமுன் நடந்திருக்கவேண்டும். இவ் வெற்றிக்குப் பின்புதான் விஜயாலயன் பாண்டிய நாட்டினுள் சிறிதுசிறிதாக நுழைந்திருக்கவேண்டும். திருக்குற்றாலத்தில் காணப்படும் இவன் கல்வெட்டுகளெல்லாம் இவனுடைய இருபதாம் ஆண்டிலிருந்தே எழுதப்பட்டிருப்பதால்(33) இவன் சுமார் கி. பி. 863, 864 ல் தான் பாண்டிய நாட்டின்மேற் படையொடு சென்றிருக்க வேண்டும். இப்படையெடுப்பில் கந்தன் இரவி என்ற சேர அரசனும் இவனுக்கு உதவி செய்திருக்க வேண்டும். குற்றாலத்தில் கிடைத்த பரகேசரிவர்மனுடைய 22 ம் ஆண்டு கல்வெட்டு ஒன்றில் கந்தன் இரவி என்ற பெயர் காணப்படுகிறது. (441 of 1917). இக்காலத்தில் பாண்டியனாய் அரசாண்டவன் இரண்டாம் வரகுணவர்மன் என்பான். (கி. பி. 862-881) "அவனைப்பற்றிச் சின்னமனூர் செப்புப்பட்டயங்களிலிருந்து அவன் பெயரைத்தவிர வேறொன்றும் அறிய முடியவில்லை."(34) இதுவே வரகுணன் விஜயாலயனால் சிலகாலம் அமுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதற்கு அத்தாட்சியாம். இக்

காலத்தில்தான் விஜயாலயன் புதுக்கோட்டையிலுள்ள நார்த்தாமலை என்ற நகரத்தின் தென்மேற்கு குன்றின்மேலுள்ள விஜயாலய சோளீஸ்வரம் என்ற ஒரு அழகிய கற்றளியை எடுத்திருக்கவேண்டும்.(35) இவனுடைய கரூர் தாலூக்கா சோமூர் கல்வெட்டுகளிலிருந்து(36) இவன் மேலை மழநாட்டையும் கைப்பற்றிச் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. வடக்கே தொண்டை மண்டலத்திலும் இவன் கல்வெட்டுகள் காணப்படுவதால் இவன் பல்லவ அரசனை நிருபதுங்கவர்மனோடு போர்புரிய நேர்ந்திருக்குமோ என்று ஓர் ஐயம் பிறக்கலாம். ஆனால் இக்காலத்தில் சோழரும் பல்லவரும் நீங்கா நட்புக்கொண்டிருந்ததால் அவ்விதம் இருக்கமுடியாதென்று உணரலாம். தொண்டைமண்டலத்தில் காணும் பரகேசரிவர்மன் கல்வெட்டுகளுக்குக் காரணம் என்னவெனின் பல்லவர் அரசுக்கு எதிரியாக அவர்கீழ் இருந்த சிற்றரசர்கள் எழ அவர்களை விஜயாலயன் வென்று அவர் எழுந்த விடங்களில் தன் கீர்த்தியை நிலைநாட்டினது என்பதுதான் என் கருத்து.

திருப்புறம்பியப் பெரும்போர்.

விஜயாலயனுக்குக் கடைசிக்காலத்தில் திருப்புறம்பியப் போர் நடந்தது. அது தென்னிந்திய சரித்திரத்தில் ஒரு பெரும் நிகழ்ச்சியாம். அப்போர் விஜயாலயன் மகன் ஆதித்தன் காலத்தில் நடந்திருக்க வேண்டுமென்பது சரித்திர ஆராய்ச்சி வல்லோர் எல்லோருடையவும் கொள்கை. இதற்கு ஆதாரம் திருவாலங்காட்டுச்செப்புப்பட்டயமும் உதயேந்திரம் இரண்டாம் பிருதிவிபதியின் செப்புப்பட்டயமும்தாம். ஆனால் இவ்விரு பட்டயங்களிலும் ஆதித்தன் காலத்தில்தான் அப்போர் நடந்தது என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. அப்போரில் சோழர் பக்கம் ஆதித்தன் சேனைத்தலைவனாக இருந்திருக்கலாம். அவ்வெற்றிக்குக்காரணம் ஆதித்தனுடைய வீரச்செயல்களாகவும்இருக்கலாம். ஆனால் அவன் அக்காலத்தில் அரசிளங்குமரனாகவே இருந்திருக்க வேண்டும். திருப்புறம்பியம் சண்டை கி. பி. 880 நடந்ததாகத் தெரிகிறது.(37) விஜயாலயன் கி. பி. 881 வரையில் ஆட்சி புரிந்து இருக்கவேண்டும் என்று அவன் கல்வெட்டுகளில் இருந்து

நாம் முன்னமே கண்டோம். ஆகையால் அச் சண்டையின் போது விஜயாலயன் வயது முதிர்ந்து போர் செய்வதற்கு ஏலாதவனாய் இருந்தபடியால் அவன் மகன் ஆதித்தன் அப் போருக்குச் சென்றிருக்கவேண்டும். மேலும் விஜயாலயன் இறப்பதற்குச் சிலயாண்டுகளுக்கு முன்னமே ஆதித்தனும் தன் தகப்பனோடு அரசுகட்டிலில் அமர்ந்திருந்து செங்கோல் நடாத்தியும் இருக்கலாம்.

நாம் இப்பொழுது திருப்புறம்பியப் போரில் கலந்து சண்டை செய்த அரசர் யார் என்று பார்ப்போம். பாண்டியன் வரகுணன் விஜயாலயன் விருத்த திசையை நோக்கி, சோழ நாட்டைக் கவர்வதற்கு அதுதான் தக்க சமயம் என்று உன்னி, ஒரு பெரும்படையோடு சோழநாட்டுள் புகுந்து இடவையென்ற ஊரில் சோழரை வென்றான்.(38) அச்சமயம் சோழருக்கு உதவிசெய்யப் பல்லவன் அபராஜிதவர்மனும், கங்கபிருதிவிபதியும் விரைந்து வந்தார்கள். பாண்டியர் படை ஒருபுறமும் பல்லவர், கங்கர், சோழர் படை மற்றொரு புறமுமாகக் கும்பகோணத்துக்கருகாமையிலுள்ள திருப்புறம்பியத்தில் ஒன்றோடொன்று எதிர்த்தன. இருமருங்கிலும் பல்லாயிர வீரர் மாண்டனர். கங்க அரசன் பிருதிவிபதியும் உயிர்துறந்தான். ஆனால் வரகுணவர்மன் முற்றும் முறியடிக்கப்பட்டுச் சோழ நாட்டினின்றும் துரத்தப்பட்டான்.(39) திருப்புறம்பியப் பெரும்போரை தென்னிந்திய சரித்திரத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் வென்ற தலையாலங்கானப் போர்க்களத்துக்கும், கரிகாற் பெருவளத்தான் வென்ற வெண்ணிப் பறந்தலைக்கும் நிகராகச் சொல்லலாம். இப்போரால் பாண்டியர் முதற்பேரரசு தொலைந்தது. பல்லவர் வலியும் தேய்ந்தது. சோழர் பேரரசு ஆழவேர் ஊன்றிற்று.

கி. பி. 881ல் விஜயாலயன் இறந்தான். சோழர் பேரரசும் பிறந்தது.

(தொடரும்)

(1) கிராமம் கல்வெட்டு : A. S. I. 1905-06.

(2) பித்தாபுரம் கல்வெட்டு : Epi. Ind. IV. p. 227.

(3) Ep. car. V. Belur 58.

(4) Prop. K. A. N. Sastri's "The Pandyan kingdom." p. 59.

(5) M. E. R. 339 of 1917.

(6) S. I. I. III. p. 415.

(7) T. A. S. III. pt. i. p. 155. "சோள மஹாத்மியம்" என்ற நூலில் குலோத்துங்கன் என்ற அரசன் துங்கேஸ்வரருக்குத் தஞ்சாவூரில் ஒரு கோயில் எடுத்ததாகவும், அதன்காரணமாக அவ்வூருக்குத் துங்கபூர் அல்லது தஞ்சாவூர் என்ற பெயர் வந்ததாகவும் கூறப்பட்டிருக்கின்றன. "Mackenzie. MM." p. 183.

(8) Ep. Ind. XIII pp 136-148.

(9) S. I. I. III. Pt IV. p 5.

(10) Sinnamanur plates ; Velurpalayam plates ; Ep. Ind. I. pp 59-60. Bom. Gaz. vol. I pt. II pp 183, 186, 281, 365 ; & L. D. Barnett's "Antiquities" pp 51, 52, 54, 55, 58.

(11) A. S. I. 1913-14 p 272.

(12) கரிகாலன் காலத்தைப்பற்றிய ஆராய்ச்சி ஒரு தீர்ந்த முடிவுக்கு வந்ததாகக் கூறமுடியாது. இதில் ஆராய்ச்சிசெய்வோரைப் பொதுவாக இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன :— கரிகாலன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தான் என்போர் பிரிவு ஒன்று. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் கரிகாலன் அரசாண்டான் என்போர் பிரிவு இரண்டு. முதற் பிரிவில் அடங்கியவரில் சிறப்பாக திரு. கனகசபைப்பிள்ளை Dr. S. கிருஷ்ணசாமி அய்யங்கார், Prof. K. A. நீலகண்ட சாஸ்திரியார், திரு. K. G. சேஷ அய்யர், திரு. K. சீநிவாச பிள்ளை முதலோராம். இரண்டாம் பிரிவில் உள்ளோர் அரசாங்கக் கல்வெட்டு இலாக்கா அதிகாரிகளாய் இருந்த கனம் வெங்கய்யா, ராவ்சாகிப். H. கிருஷ்ணசாஸ்திரி, K. V. சுப்பிரமணிய அய்யர், Prof. P. T. சீநிவாச அய்யங்கார், பண்டிதர் மு. இராகவய்யங்கார் முதலியோராம். கரிகாலன் கால ஆராய்ச்சி செய்ய வேண்டுவோருக்குக் கீழ்க்கண்ட குறிப்புகள் பயன்படும் :—(i) A. S. I. 1905-06 p 174. (ii) Dr. S. K. Ayyangar's Beginnings of South

Indian History" pp 161—240. (iii) K. G. Sankara in the 2 T. M. S. vol. VIII pp 34—60. (iv) K. G. Sesha Aiyar in the same journal, vol. XVI pp 143 ff. (v) K. V. S. Ayyar's "Ancient Dekhan" pp. 91 ff. (vi) Ep. Ind. vol. XI p 340. (vii) L. D. Swamikannu Pillai's "Indian Ephemesis" vol. I. (viii) T. G. Aravamuthan's "The Kaveri, Mankharis and the Sangam Age". (ix) P. T. Srinivasa Ayyangar's "History of the Tamils" pp 358—388.

(13) S. I. I. vol III. pt IV p 5.

(14) ச. சோமசுந்தர தேசிகருடைய "பழந்தமிழ்ப் பெருமக்கள்" pp 8 & 9.

(15) For a discussion about them see P. T. Sriniva Ayyangar's "Tamil India" pp 527—537.

(16) வேள்விக்குடி சாசனம் ll 43 & 44.

(17) A. S. I. 1905·06, pp 176—177.

(18) "The Pandyan Kingdom" p 65.

(19) Ep. Ind. IV p 181 and Ep. Ind. V p. 159.

(20) "The Pandian Kingdom" p 71.

(21) Ind. Ant. XXXVII p 171.

(22) My. Gaz. vol. II pt. II p 565.

(23) "The Pandyan Kingdom" p 75.

(24) M. E. R. 1907-08 pp 55-56.

(25) A. S. I. 1905-06, p. 179, F. M. 8.

(26) Ep. Ind XIII. pp 134 ff; XV. p 49, F. M. I.

(27) "கள்ளர் சரித்திரம்" p 23.

(28) S. I. I. III. Pt v. p 512.

(29) T. A. S. III. Pt I, p 108.

(30) Ep. Ind. XIII p 134.

(31) M. E. R. 1909 p 86.

(32) பாகூர் பட்டயம் Ep. Ind. XVIII pp 5 ff.

(33) 444 of 1917.

(34) "The Pandya Kingdom" p 76.

(35) No. 282 of Pudukkottai Inscriptions.

(36) 205 of 1917.

(37) "The Pandya Kingdom" p 76.

(38) "The Pandyan Kingdom" p 76.

(39) திருவாளர் கோபிநாத ராவ் அவர்கள் வரகுணனும் ஆதித்தனும் சேர்ந்துகொண்டு பல்லவனைத் திருப்புறம்பியத்தில் முறியடித்துக் கொன்றனர் என்று கூறுவர். See. Ep. Ind. XV p 49. "It is known from other records that Aditya and the Pandya King Varaguna marched against the Pallava, Nrpatunga-Varman, otherwise known also by the name of Aparajita Varman, defeated and killed him". இவ்விடத்தில் Prof. K. A. நீலகண்ட சாஸ்திரியார் கூறுவது போற்றத் தகுந்தது. "The appearance of the cholas among the opponents of Srimara at Kudamukku and the expedition against Idavai strongly support the view that the cholas were the friends of the Pallavas and the foes of the Pandyas till the battle of Sri-Purambiyam". (The Pandyan Kingdom" p 77 fmi). இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரச் செப்புப்பட்டயம் திருப்புறம்பியத்தில் வென்றவன் அபராசிதன் என்றும் தோற்றவன் வரகுணன் என்றும் தெளிவாகக்கூறுகின்றது.

தமிழ் நாடும் தமிழ் நாட்டு வழக்கவொழுக்கங்களும்.

இல்லற வாழ்க்கை.

(முற்றொடர்ச்சி—296.)

திரு. மெ. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானிடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாம்—சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்வகுத்த
அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து—என்ற எழுவகைப் பட்ட பிறவிகளுள்ளே, மக்கட் பிறவியானது கல்வியுடைமையாலும், ஆறறிவுடைமையாலும், ஒழுக்கமுடைமையாலும், செயற்கரிய காரியங்களைச் செய்யும் திறனுடைமையாலும், தேவரொழிய மற்றெல்லாப் பிறவிகளினும் உயர்ந்ததென்பது முன்னே விரித்துரைக்கப்பட்டது. இனி எஞ்சிநின்ற தேவர் பிறவி எத்தன்மையதென்று ஆராய்தலும் நம்முடைய கடமையாகும். அவ்வாராய்ச்சியில் புகுமுன்னரே, எம்முடைய நண்பர் ஒருவருள் மேலவாசல் உபாத்தியாயர் நாராயணசாமிப் பிள்ளை யென்பார் யாம் முன்னர் முடித்துக் காட்டிய முடிபில், ஐயப்பாடு சிலவுளவென்று கண்டு, அவற்றை எழுதிவிடுத்தனர். அவ்வையப்பாடுகளை ஒருவாறு ஒழித்துவிட்டு மேல் உரைப்பான் எடுத்துக்கொண்ட பொருளுரையை முடிப்பாம்.

முதலாவது ஐயப்பாடு:— ‘ஞெண்டும் தும்பியும் நாலறிவினவே’ என்று ஆசிரியர் சூத்திரம் ஓதியிருப்பதனைக் கண்டு வைத்தும், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் வண்டிற்குச் செவியறிவும் உண்டென்று முடித்ததற்கு மேற்கோள், பெரும்பாணாற்றுப்படையிலே, யாழின் இசையை வண்டு தன் இனத்தின்

ஓசையென்று செவிகொடுத்துக் கேட்டதென வந்துள்ளது. சங்கப்புலவரெல்லாம் உலகியலை நன்ருக ஆராய்ந்தே உண்மை நிகழ்ச்சிகளையே வெளியிடுவோர் ஆவார். ஆகையால் அச் சங்கப்புலவர் கோட்பாடேபற்றி அவ்வாறே ஆராய்ச்சி முறையில் வல்லராகிய நச்சிஞர்க்கினியர் கூறியபடி, வண்டிற்குச் செவியறிவும் உண்டென்று கொண்டால் வரும் இழுக்கு என்னையோ என்பது.

இரண்டாவது ஐயப்பாடு:-'ஒன்றறிவதுவே உற்றறிவதுவே' 'ஆறறிவதுவே அவற்ருெடு மன்னே' எனவும் 'மாவும் மாக்களும் ஐயறிவுயிரே' 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' எனவும் ஆசிரியர் தொல்காப்பியஞர் சூத்திரங்களை விதந்தோதி, பிறப்பால் மக்களென்று இவ்வுலகில் தோன்றிஞருள்ளே பெரும்பாலார், தெய்வமொன்று உண்டெனும் சிந்தையிலராய், பாவம் இது புண்ணியம் இதுவென்னும் பாகுபாடு அறியாதவராய், ஐம் பொறிகள் சென்ற வழியே சென்று, தோன்றியவாறே ஒழுகும் மடவோராய் இருத்தலைக்கண்டு, அவருக்கும் விலங்குக்கும் இடையே வடிவால் வேற்றுமைஉளதாயினும், அறிவுவகையால் வேற்றுமையில்லை ஆதலின், அவரைப் பெயரானும் விலங்கையே குறிப்பதான மாக்கள் என்று குறியிட்டு விலங்கோடு அவரையும் ஒதுக்கிவைத்து, 'மாவும் மாக்களும் ஐயறிவுயிரே' என்று கூறிஞர்; அன்னாரைப்போலாது நான் இத்தன்மையன், இறைவன் இத்தன்மையன், இறைவன் தாளைச் சேரவொட்டாது என்னைத் தடுப்பது இது, இத்தடையை நீக்கி அவன் திருத்தாள் ஆகிய வீடுபேற்றை அடையும் வழி இது என்னும் உணர்ச்சியுடையாரே மக்களென்று சிறப்பித்துச் சொல்லப்படுவார். பொறியின் வயப்படாத அவ்வுணர்ச்சிதான் தொல்காப்பியஞரால் குறிக்கப்பட்ட மனவுணர்வு என்பது. அதனை உணராத பவணந்தியார், தொல்காப்பியஞர் கருத்தொடு மாறுபட்டு, மக்கள் என்று சுட்டப்பட்டவரையும் விலங்கு பறவை வானவர் முதலியவற்ருேடு உடன் எண்ணி ஐயறிவுயிர் என்று அடக்கிச் சூத்திரம் செய்தது குற்றம் என்று யாம் முடித்துக் காட்டியதிலே, அவ்வாருகத் தொல்காப்பிய வுரை ஆசிரியர்

பேராசிரியர் முதலியோர் கூறுமையால் அவர் உரையோடு எம்முரை மாறுபடுகின்றது; அன்றியும் தெய்வம் உண்டென்னும் கொள்கையை விட்டவராகிய உலகாயதர் என்பாரையும், உலகாயதமதத்தைத் தோற்றுவித்தவனாகிய தேவகுருவையும் மக்களெனவும் தெய்வமெனவும் கொள்ளுதலே அன்றி மாக்களென்று கொள்வாமோ என்பது.

ஐயப்பாடுகள் என்று இவைகளை எமக்கு நேரே எழுதிவிடுத்த நண்பருக்கு உண்மையாகவே மனமுவந்த விடை கூறும் கடப்பாடுடையேம் என்க.

முதலாது ஐயப்பாட்டிற்கு விடை:—யாழின் இசையை வண்டு தன் இனத்தின் ஓசையென்று கருதிச் செவிகொடுத்துக் கேட்டதாகச் சொல்லியது புலவர் வழக்கில்வரும் புனைந்துரையென்பதைப் பலவேறு புலவர் புனைந்துரை வழக்குகளை எடுத்துக்காட்டி வண்டிற்குச் செவியறிவும் உண்டென்று நச்சினார்க்கினியர் முடித்தது தவறு என்பதை முன்னமே விரித்துரைத்தாம். பெரும்பாணாற்றுப்படை சிந்தாமணி முதலிய நூன்மேற்கோளைவிட்டு, காட்சியளவையிலாவது அனுமான வளவையிலாவது வண்டிற்குச் செவியறிவு உண்டென்று யாரேனும் நாட்ட வல்லவராயின், நாம் அதனை எற்றுக் கொள்ளத் தடையில்லை. அது கிடக்க.

நச்சினார்க்கினியர், ஒரோவழி, எல்லாராலும் இது உண்மை நிகழ்ச்சியன்று புனைந்துரைவகையே என்று துணிந்துகொண்டவிடத்திலும் இது உண்மை நிகழ்ச்சி யென்று மயங்கிக் கூறியதுண்டு.

> 'விரிகாஞ்சித் தாதாடி இருங்குயில் விளிப்பவும்
> பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவும்
> கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
> எரிபொத்தி என்னெஞ்சம் சுடுமாயின் எவன் செய்கோ?'

என்பது-கலி-34 பகுதி. இது வினைவயிற்பிரிந்துபோன தலைமகன் இளவேனிற் காலத்தில் மீண்டுவருவதாக வற்புறுத்திச்

சொல்லிப்போனபடி வராமையால், தலைவி வருந்தித் தோழிக்குச் சொல்லியது.

இதன்பொருள்:-குயிலும் தன் பெடையை விளிக்கின்றது, அது விளிக்கின்றது, துணைவியரைப் பிரிந்து போயினரெல்லாம் உடனே வந்து கூடுங்கள் என்று பறைசாற்றினாற் போலும்; அவ்வாறு குயில் விளிப்பது கேட்டும் என் நாயகர் வன்னெஞ்சர் ஆகலின் வந்தாரிலர்; நானோ பிரிவினால் உற்ற துயரை மறைக்க முயலுவேன்; ஆயினும் என் நெஞ்சம் என்வழிப் பட்டிலது; பண்டைக்காலத்தில் அம்பலத்தில் அமர்ந்திருந்து வழக்குமுறை செய்வோர் அங்குள்ள மரத்தினடியில் வழக்காளரையும் சான்று பகருவாரையும் இருத்திச், சூளுறுத்திச் சான்று பகரச்செய்து கேட்பது வழக்கம்; அப்போது யாரேனும் பொய்க்கரி கூறினாராயின் அந்த மரமானது உடனே நிறம்வாடித் தீப்பிடித்து எரியும் என்பர்; அந்த மரம்போல என் நெஞ்சம் வாடி எரிகின்றது என்று தலைவி கூறினாள் எ-று.

இப்பகுதியின் குறிப்புரையிலே நச்சினார்க்கினியர் 'புல்லும் மரமும் ஓரறி வினவே' என்னும் சூத்திரத்தில் 'பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்பதனால், 'பிறஅறிவும் உளவென்று கூறினர். அதனால் பாவத்திற்கு அஞ்சி மரம் கவின்வாடிற்றென்றார்' என்று கூறினர்.

இங்கே பொய் இன்னது மெய் இன்னது, பாவம் இன்னது புண்ணியம் இன்னது என்று உணர்ந்துகொள்ளும் உணர்ச்சி அம்பலத்தில் உள்ள மக்கட்கேயன்றி அங்குள்ள மரத்திற்கும் உள்ளதாமா? பாவத்திற்கு அஞ்சல் வேண்டும் என்னும் உணர்வும் மக்களுக்கேயன்றி மரத்திற்கு உளதாமோ? அம்பலத்தில் உள்ள மரம் ஆதலின், தெய்வத்தின் செயலால் தீப்பற்றி யெரியவுங்கூடும் என்று சொல்வார் உளராயினும், அது தெய்வச்செயலால் கூடினும் கூடுமே அன்றி, மரத்திற்கு அவ்வகை உணர்ச்சி எவ்வகையாலும் உண்டாமா? அக் கலிப்பாட்டைப் பாடிய ஆசிரியர்க்கு மரத்திற்கு அவ்வகை உணர்ச்சி உண்டென்பதே துணிபாகுமா? ஓர் உயிருக்கு உரிய

தல்லாத தொழிற்பண்பை அதற்கு உண்டென்று நாட்டுதற்கு அவ்வாசிரியர்க்குத்தான் கட்டளையுண்டா? ஆசிரியர் புனைந்துரையாகக் கூறியதனை நச்சினார்க்கினியர் மெய்யென மயங்கிக் கொண்டு இவ்வாறு உரைகூறினர் என்பதிலே இப்போது யாழுருக்கேனும் மயக்கம் உண்டோ?

அதுவுமல்லாமல், 'புல்லும் மரமும் ஓரறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்னும் சூத்திரத்தில், 'பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்ற பகுதிக்கு, பிற அறிவும் (மெய்யால் உணரும் உணர்வேயன்றி ஏனை நாவாலும் மூக்காலும் கண்ணாலும் காதாலும் உணரும் உணர்வும்) ஓரறி வுயிராகிய மரத்துக்கு உளவாம் என்பது ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும் கருத்தாமென நச்சினார்க்கினியர் கூறியது பெரியதோர் மயக்கவுரையாகும். ஓரறிவுயிர் இன்னதென்று உணர்த்த எழுந்த சூத்திரம் 'புல்லும் மரமும் ஓரறிவினவே' என்பது. அவ்வோரறிவுயிர் மற்றை அறிவுகளையும் உடையவாம் என்பது, 'பிறவிக்குருடன் இருகண்ணாலும் பார்த்தான்', 'காலால் முடவன் விரைவாக நடந்தான்' என்றாற்போலும். மரத்திற்கு ஆறுவது அறிவும் உண்டெனக் கொள்ளவேண்டினும், அது மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்னும் சூத்திரத்துப் 'பிறவும், உளவே அக்கிளைப் பிறப்பே' என்பதனால் அமையுமேயன்றி, 'புல்லும் மரமும் ஓரறிவுயிரே' என்னும் சூத்திரத்துப் 'பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்பதனால் அமையாது. ஈண்டுப் பிறவும் என்றது புதல் கொடி முதலியவற்றை யென்று பேராசிரியரும் கூறினர். 'பிறவும் உளவே' என்பதற்குப் 'பிற அறிவும் உள' என்று பொருள் கண்ட நச்சினார்க்கினியர், 'அக்கிளைப்பிறப்பே' என்றது எப்பிறப்பைக் குறித்ததென்று கொண்டனரோ அறியக்கூடவில்லை. புல்லும் மரமும் என்னும் அவற்றையே குறித்தாரெனின், பிறப்பே என்புழி நான்காம் வேற்றுமை உருபு தொக்கதெனல் வேண்டும், 'ஐந்தவித்தான் ஆற்றல்' (குறள்) என்புழிப்போல. புல்லும் மரமும் என்னும் அவையே குறிக்கப்பட்டவாயின், 'அவ்வகைப் பிறப்பே' என்று ஓதலாகும். நச்சினார்க்கினியர் 'கிளைப்பிறப்பே' என்பதனைப்

பயனில மொழிதல் ஆக்கினர் போலும். அதுநிற்க, இவ் விடத்தில் நச்சினர்க்கினியர் உரை முற்றும் தவருதல் அறிக. இத்துணையும் கூறியவாற்ருல் வண்டிற்குச் செவியறிவு உள்ளது போலச் சங்கப்புலவர் புனைந்துரைத்தவற்றை நச்சினர்க்கினியர் மெய்யென மயங்கிக்கொண்டு உரைத்தாரெனவே துணிந்து முதலாவது ஐயப்பாட்டை ஒழிக்க.

இரண்டாவது ஐயப்பாட்டிற்கு விடை:—'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்னும் சூத்திரத்திற்கு, மேலே கண்டபடி யாம் பொருள் கொள்வதற்கு இடங்கொடுத்தன 'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்-கற்ருரோ டேனை யவர்' என்னும் திருக்குறளும், 'தக்க வின்ன தகாதன இன்னவென், றொக்க உன்னலராயின் உயர்ந்துள-மக்களும் விலங்கே' என்னும் கம்பர் பாடலுமே. அச் செய்யுள்களுக்கும், 'பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்-மக்கட் பதடி யெனல்' என்னும் திருக்குற ளுக்கும் முன்னமே விரிந்த பொருள்கூறி, அச்சூத்திரக் கருத்து இதுவெனக் குறித்தாம். அதுபோதாதெனின், அக்கருத்தையே துணியும் திருக்குறள் இன்னும் மிகப் பலவுள்ளன. அவற்றை யும் கண்டறிக.

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்'.

இக்குறளில் குறிக்கப்பட்ட 'மக்களுக்குரிய பண்பு' என்பது 'பெருமை சான்ருண்மைகளினின்றும் வழுவாது நின்றே அறிந்து ஒத்து ஒழுகுதல்' என்பர். அந்த மக்கட் பண்பில்லா தவர், அரம்போலும் கூர்மையுள்ள அறிவாளரெனினும் உற்றறியும் ஓரறிவுயிராகிய மரத்தையே ஒப்பர் என்ருர் ஆசிரியர்.

'உறுப்பொத்தல் மக்களொப் பன்ருல் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு'.

இத் திருக்குறளில், மக்களுக்குரிய உறுப்புக்களில் ஏதும் குறைபாடு இல்லாதாரெல்லாம் நன்மக்கள் என்று சொல்லப்

பட்டவர்க்கு ஒப்பாகார். மக்கட் பண்புகளில் குறைபாடு இல்லாதாரே ஒப்பாவர் என்றார்.

'உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்
மரமக்கள் ஆதலே வேறு'

இக்குறள் 'ஊக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் உள்ளது. இதன் முதலடிக்குப் பரிமேலழகர் பொருந்தாத உரை கூறினர். அதைப்பற்றிச் சிறிது பேசுவாம். உரம் என்னும் பலபொருள் ஒரு சொல் ஈண்டு ஊக்கம் என்னும் பொருள் குறித்து வந்தது. அச்சொல் அப்பொருள் குறித்தலை 'வலி மார்பூக்கம் ஞானம் திடம் உரம்' என்னும் பிங்கலச் சூத்திரத்தாலும், 'சிதைவிடத் தொல்கார் உரவோர்' (குறள்) என்பதனாலும் உணர்க.

இனி இத்திருக்குறளின் கருத்து :—பெறுதற்கரிய உள்ளத்தைப்பெற்றுவைத்தான் ஒருவனுக்கு, அவ்வுள்ளத்தான் உளதாகும் செல்வம் ஆவது ஊக்கமே ஆதலின், அவ்வூக்கத்தை உடையாரே மக்களெனற்குரியார். ஊக்கம் இல்லாதவரோ உள்ளமும் உள்ளத்தின் செல்வமாகிய ஊக்கமும் இல்லாத மரங்கள் ஆவார்; மக்களாகார் என்பது. வெறுக்கை-செல்வம். 'உள்ளவெறுக்கை' என்பதைச் 'செவிச் செல்வம்' என்றாற் போலக் கொள்க.

பரிமேலழகர் உரன் என்பதற்கு அறிவு என்று பொருள் கூறி, 'ஒருவற்கு அறிவாவது ஊக்கமிகுதி' யென்றார். இது பொருள்படாமை அறிந்துகொள்க. வெறுக்கை என்பதற்கு மிகுதியென்று பொருள் கூறினர். ஊக்கத்தின் மிகுதி எற்றுக்கு? ஊக்கமே அமையாதோ? 'அஃதிலார்' என்புழி 'அஃது' என்னும் சுட்டுப்பெயர் ஊக்கமிகுதியைக் குறிப்பதாக எழுதுகிறார். மிகுதியான ஊக்கமின்றிப் போதிய ஊக்கமுடையாரை மரங்களென்று கொள்வாமோ மக்களென்று கொள்வாமோ? இன்னும் விரிப்பிற் பெருகும் ஆகலின் அமைக. இக்குறளின் முதலடிக்குப் பரிமேலழகர் உரைத்தது பொருந்தாவுரையென விடுக்க.

இரண்டாவது அடிக்கு அவர் விரித்துரைத்த பொருள் பொருந்தும். அஃதாவது 'சாதிமரங்களோடு (ஊக்கமில்லாதார் ஆகிய) இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள் வடிவே பிறிதில்லை என்பதும் சாதிமரங்களாயினும் இல்லம் முதலிய வற்றைக் கட்டுதற்கு உதவும், இந்த மக்கள்வடிவு பெற்ற மரம் ஒன்றுக்கும் உதவா என்பதும்.

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்

இக்குறளின் பொருள்:—மக்களுடைய கண்ணிற்கு அணி கலம் என்று சொல்லப்படுவது கண்ணோட்டம். அக்கண்ணொடு பொருந்தி வைத்தும் கண்ணோட்டம் செய்யாதவர் சுதைமண் ணோடு பொருந்திய மரப்பாவைக்கு ஒப்பாவார். அப்பாவையும் கண்ணொடு பொருந்தி வைத்தும் கண்ணோட்டம் செய்யாதாக லான் எ-று.

இவ்வுரை பழைய உரையாசிரியர் உரை. மிகப் பொருத்த மான உரை. இதனைப் பரிமேலழகர் மறுத்து, கண்ணொடு பொருந்தி வைத்தும் கண்ணோடாதவர், நிலத்தொடு பொருந் திய மரத்துக்கு ஒப்பாவார், நிலத்தொடு பொருந்திய மரம் கண்ணொடு (கணுவொடு) பொருந்தியதாயினும் கண்ணோட்டம் செய்யாது ஆகலான்—என்று விரித்துரைத்தார். இஃதோர் வியப்புரை ஆகும். வாழை தென்னை முதலிய மரங்களுக்குக் கணுவில்லாமையாலும், கணுவையுடைய மூங்கில் கரும்பு வேழம் முதலியவை புல் எனப்படுமேயன்றி மரமெனப்படா மையாலும், நிலத்தோடு இயைந்த என்னும் அடைமொழி யால் பொருட் சிறப்பின்மையாலும் அது பொருளன்மை அறிக. நிலத்தொடு பொருந்திய மரமாயினும் கண்ணோட்டமுடையது போலத் தன்கண் அடைந்தார்க்கு நிழல்கொடுத்துக் கனி முதலியவற்றை உதவுமே. வண்டுமுதலிய பறவைகளுக்கு உணவளிக்குமே. ஒருசார் மாக்களுக்குக் குளகும் உதவுமே. மரப்பாவை ஒன்றையும் உதவவல்லதன்று ஆகலான், மண் ணோடியைந்த மரம் என்றதனால் மரப்பாவையையே நாயனார்

குறித்தாரென்க. மரம் பர்வைக்கு ஆகுபெயர். மண்-சுதை. ‘நுண்மாண் நுழைபுல னில்லான் எழில்நலம், மண்மாண் புனை பாவை யற்று’ என்னும் திருக்குறளாலும் அறிக.

‘நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று’

இதன் கருத்து :—மக்களெனப்படுவார் நாணவேண்டிய பழி பாவங்களுக்கு நாணவேண்டும். அந்த நாணம் இல்லாதவர் இயங்குதற்குரிய உயிருடை மக்களாகார். அவருடைய இயக்கம் கயிற்றினால் உயிருள்ளதுபோல ஆடும் மரப்பாவையின் இயக்கம்போலும், எ-று.

‘மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.’

இதன் கருத்து :—கயவர், வடிவால் முழுதும் மக்களையே ஒப்பர், ஆயினும் மக்கட்சாதிவேறு கயச்சாதிவேறு-எ-று.

இத்துணையும் கூறியவாற்றால் மக்களென்று சொல்லுதற் குரியார் இன்னார் என்னும் திருக்குறள் வரையறை உணர்த்தப் பட்டது. இனி மாக்கள் எனப்படுவார் யாவர்?

‘செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.’

இத்திருக்குறளில், செவியால் நுகரப்படும் கேள்விச்சுவையை அறியாதவராய், வாயால் உண்ணும் உணவின் சுவையைமாத் திரம் உணரும் தன்மையை உடையோர், மாக்களென்று சொல்லப்படுவார் மக்களெனப்படார் என்று உணர்த்தப்பட்டது.

‘கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.’

இத்திருக்குறளில், கொலைத்தொழிலைச் செய்பவர் புலைவினையர் ஆதலின் மாக்களெனப்படுவார், மக்களெனப்படுவார் அல்ல ரென்பது உணர்த்தப்பட்டது.

இது கொண்டு மாக்கள் எனப்படுவார் இத்தன்மையார் என்பதும் தொல்காப்பியனாரால் குறிக்கப்பட்ட மக்கள் எனப்படுவாருக்கும் மாக்களெனப்படுவாருக்கும் வேற்றுமை இன்னதென்பதும் உணர்ந்துகொள்ளலாம். தெய்வத் திருக்குறள் என்னும் பண்டை மறையில் மக்கள் மாக்கள் என்னும் சொல் வழக்குத் தொல்காப்பியனார் ஆணையிற் பிறழ்ந்து வாராமை நோக்கத்தக்கது.

இனி, 'மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்' (பட்டினப்பாலை 2-6) என்புழி, நச்சினார்க்கினியரும் மாக்களென்றார் ஐயறிவே உடையராகலின்; என்றது சோனகர் சீனர் முதலியோரை- என்று கூறினர்,

'தவஞ்செய் மாக்கள் தம்முடம் பிடாஅ
ததன்பய னெய்திய அளவை மான'

(பொருநராற்றுப்படை) என்புழி, தவமென்று ஒன்றை மேற்கொண்டு செய்வாருள்ளும் அத்தவத்தால் வீடுபேற்றை அடைபவரே மக்களெனப்படுவார். செல்வத்தை வேண்டித் தவம் செய்வார் மக்களென்றற் குரியரல்லர் என்று அவ்வுரை ஆசிரியரே உரைத்தார்.

'பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்' என முல்லைப்பாட்டினும் அறிவில்லாதோரைக் குறித்து வந்தது.

இனி, 'முந்நீர்த், திரையிடு மணலினும் பலரே உரைசெல-
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே; (மதுரைக்காஞ்சி) என்பதன் உரையிலே, நச்சினார்க்கினியர், 'கழிந்தோரே என்பதற்கு மக்கட்குரிய மனவுணர்வின்மையில் பிறப்பறுக்க முயலாது பயனின்றி மாண்டோர்' என்று உரைவிரித்து, 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றதனால் 'மனவுணர்வின்றி யென்றும்' என்று அகலவுரை கூறினர்.

ஆகவே, 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்னும் சூத்திரப் பகுதிக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரை மிகவும் அருமையான

தென்று பாராட்டத்தக்கதாம். அன்றியும் அது யாம் விரித்துரைத்த உரைக்கருத்துக்கு முழுதும் ஒத்திருத்தலும் கண்டுகொள்க.

இதனாலே, தொல்காப்பிய மரபியலுக்குப் பேராசிரியர் உரை அச்சிடப்பட்டு வெளியாயிருப்பதற்கு வேறாக, நச்சினார்க்கினியர் எழுதிய உரை ஒன்று உளதென்றும், அது இன்னும் நம் கையகப்படவில்லை யென்றும் தெரிந்துகொள்ளப்படும். அது நிற்க.

'மக்கள்தாமே ஆறறிவுயிரே' என்னும் சூத்திரத் தொடர்ச்சியாகிய 'பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்பதற்கு, என்ன உரை கூறினாரோ? முற்குறித்த 'புல்லும் மரமும் ஓரறிவினவே' என்னும் சூத்திரத்தின் தொடர்ச்சியாகிய 'பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்பதற்கு, மரம் முதலியவற்றுக்குப் பிற அறிவும் உளவென்று ஆண்டு விரித்துரைத்தார். ஈண்டு மக்களுக்கு ஆறாவது அறிவின் மேலாகப் பிறவும் உளவென்று கூறினாரோ வேறு கூறினாரோ அறிகிலம். அதுநிற்க.

'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு'—என்னும் திருக்குறளும் எமது கருத்தை வலியுறுத்தல் கண்டுகொள்க.

இனி, கடவுள் இல்லையென்னும் கொள்கையை யுடையாரையும், உலகாயதநூல் செய்த தேவகுருவையும் யாராகக் கொள்ளுதும் என்னும் வினாவிற்கு விடை காணல்வேண்டும்.

'உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையாய் வைக்கப் படும்.' என்னும் தெய்வத் திருக்குறள் இவ்வையத்தை ஒழிக்க வந்ததென்றறிக. இதன் பொருள் :—உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவால் இல்லை யென்று சொல்லுவான் மகனென்று கருதப்படான் ; உலகில் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும்.எ-று.

உயர்ந்தோரெல்லாம் கடவுள் உண்டு, மறுபிறப்பு உண்டு, இருவினைப்பயன் உண்டு, வீடுபேறுண்டு என்னும் கொள்கையை யுடையவர். அவற்றுள் ஒன்றும் இல்லை, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்னும் கொள்கையை உடையவன் புல்றிவாளன். அவன் மகன் வடிவு பெற்றதோர் பேய் என்றவாறும். பேய் என்றார், கண்டார்க்கும் காணுதாருக்கும் நடுக்கத்தையும் அல்லலையும் உண்டர்க்குவதனாலும், அடித் தோட்டும்வரைப் பிடித்தது விடாக் கொள்கையுடைமையாலும். ஆகவே உலகாயதர் என்பார் ஒருவகை அறிவும் ஆராய்ச்சியும் உடையாரெனினும், அவர் திருக்குறளில் 'புல்லறிவாண்மை' என்னும் அதிகாரத்துக்குரியரானுர். ஆகவே அவர் ஆறறி வுயிராகிய மக்கள் வகையினரல்லர் என்பதே துணிபு.

இனி, உலகாயத மதத்தை இந்திரனுக்கு ஓதுவித்த தேவ குருவை யாரென்று கொள்ளலாம் எனின், உலகாயதர் என்பாரை எப்படி எப்படிக் கொண்டாமோ அப்படியே கொள்ளத்தான் திருக்குறள் நமக்கு இடம் தருகின்றது. திருக்குறள் ஆணையை கடக்க நமக்கு வழியேது? தேவராயினும் இழுக்குடையோர் இழுக்குடையோரே. அவர் பிறப்பைப்பற்றி மேல் எழுதும் உரையில் விளங்க உரைப்பாம்.

*பண்டைக்காலப் பாவலரும் காவலரும்.

ஆசிரியர், திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தோரமங்கலம்.

உலகநிகழ்ச்சிகளை உற்றுநினைப்பின், இருதிறப்பட்ட பொருட்கள் ஒன்றை ஒன்று இன்றியமையாதனவாக அவாவி இணைந்து பொருந்தித் தொழில்புரிதலால், உலகநடை மேம்பட்டு இன்பம் மிகச் சிறப்பெய்தி வருகின்ற வுண்மை தெளியப்படும். இதற்குக்காட்டாகச் சில கூறலாம். அறிவில்லாத உடலும், அறிவுருவாகிய உயிரும் கலந்ததே நமது வாழ்க்கை. அறிகருவிகளாகிய கண்முதலிய ஐம்புலன்களும் அறிவிக்கும் வண்ணம், தொழிற் கருவிகளாகிய கை முதலான உறுப்புக்கள் தொழில் தொடங்கிப் பயன் தருகின்றன. அங்ஙனமே, மனம் முதலிய அகக்கருவிகளின் (அந்தக்கரணம்) ஏவலை, விழி முதலிய வெளிப்புற அறிகருவிகள் நிறைவேற்றுகின்றன. மதிநுட்பம் மிக்க ஆடவரும், நற்பண்பூடைய மங்கையரும் கலந்து இனிது நடத்த இல்லறமென்னும் நல்லறம் மாண்புற வளர்கின்றது. சட்டக்கலை தேர்ந்த நீதியாளன், உயர்ந்த இருக்கையிலிருந்து மொழிவதைப் படையொடு பயின்ற உடல்வலியாளன் கீழ்நின்று செய்கின்றான். பலபேச்சேன்? உலகப்படைப்பு முதலிய முத்தொழில்களையும், சிவம் சக்தியுடன் இயைந்தே செய்கின்ற தென்கை, சைவசித்தாந்தத் துணிபே யன்றோ? இவ்வாறே, கல்வி வழிகாட்டச் செல்வம் நற்பாங்கில் நடப்பதால் மக்கட்டொகுதி மாண்புற்று வாழ்வனவாம். எக்காலத்திலாயினும் ஆக, ஓர் நாடு நாகரிகத்திற் சிறப்புற்றதென நன்கு மதிக்கப் பெறுமானால், அந்நாட்டில் மிகுந்த கல்வியும் திரண்டசெல்வமும்

---

* இக் கட்டுரை, சுருக்கமாய்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற் சென்ற ஆண்டுவிழாக் காலத்தும், சின்னாட்கட்குமுன் நிகழ்ந்த பல்லாவரம் சங்கத்தினும் சொற்பொழிவாற்றப்பட்டது.

பெருகி இருக்கின்றனவெனத் திட்டமாய்க் கூறிவிடலாம். தமிழ்ப் புலவர்க்கு அரசன் எனப் பெயர்பெற்ற புலவர் ஒருவர், ஓர் நாட்டின் சிறப்பைக் கூறப்புக்க காலையில்,

'பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே'

என்று, செல்வம் கல்வியோடு கலந்து சிறப்பாகத் தரும் பயன்களையும்,

"எகம் முதற்கல் விமுளைத் தெண்ணில் கேள்வி
யாகம் முரட்டிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே"

எனக் கல்வியின் தனிப் பெரும் சிறப்பையும் அது தரும் விழுமிய பயன்களையும் குறித்துரைத்தனர்.

அறிகருவிகள் எவ்வியவாறு தொழிற்கருவிகள் செயலில் முனைந்து பயன் விளைக்கும் என்று நாம் மேலே சுட்டியிருப்பதைக் கல்வியின்பாலும் செல்வத்தின் மேலும் முறையே செலுத்திக் குறிக்கொள்ளவேண்டும். ஏவும் வினைமுதல் கல்விமான்களாகவும், இயற்றும் வினைமுதல் செல்வவான்களாகவும் இருந்து நாட்டின் நலங்களைப் பெருக்குவதுதான் என்றும் இயற்கையான நேர்முறை. இதனையே, "இருவே றுலகத் தியற்கை திருவேறு-தெள்ளிய ராதலும் வேறு" என ஆசிரியர் வள்ளுவனாரும் குறித்தோதினர்.

நம் தமிழ்நாடு முற்காலத்தில், உயர்வுமிக்கு விளங்கிய நாடுகளிற் றலைசிறந்து விளங்கியதென்பதை மறுப்பவரிலர். அக்காலத்தில், கூர்த்த மதிவளம்மிக்க புலவர் பெருமக்கள், காலத்திற் கேற்பவற்றை ஆய்ந்து கூறிக் கட்டளையிட்டவாறே, வள்ளன்மைமிக்க செல்வச் சீமான்கள் பணிசெய்து நாட்டை வளமுறுத்தி வாழ்ந்தனர். இங்ஙனம் தன்னலம் விரும்பாக் கல்வியும், செல்வமும் கைகோத்துக் குலாவுமேல், அந்நாடு,

பொன்னாட்டினும் புகழ்மிக்கும் நன்னாடாகுமென்பதில் ஐயம் சிறிதுமில்லை.

அன்பர்காள்! நன்கு கருதுமிடத்து, ஓர் நாட்டின் சிறுமை பெருமைகட்குக் காரணமாவார் பொதுவகையில் அந்நாட்டின் கல்விமான்களே என்பது பொருந்தும். பெரும் புலவர்களாகிய நீவிர், இதனைப் புதிய கருத்தென எண்ணன்மின்!

"வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே-நிகழ்ச்சி யவர்கட் டாக லான" என ஆசிரியர் தொல்காப்பியனார் துணிந்த தொன்மைக் கருத்தே அஃது. இச் சூத்திரத்தின் பொருளை நச்சினார்க்கினியர், "உலகத்து நிகழ்ச்சி யெல்லாம் அவரையே நோக்கினமையின்" என்றுரைத்து, 'அவரையே நோக்குத லென்பது, அவராணையின் உலக நிகழ்ச்சி செல்கின்றதென்ற வாறு' என்றும், 'உயர்ந்தோரெனப்படுவோர் அந்தணரும், அவர்போலும் அறிவுடையோருமாயினா ரென்பது" என்றும் விளக்குதலுங் காண்க.

அந்தணரென்பதோர் குலப் பெயரன்று என மெய்ம்மை காண்பீரேல் நும் ஐயப்பாடகலும்.

ஆகவே, "அறிவுசான்ற உங்கள் தலைமிசைக் கிடந்த பெருஞ்சுமையே, நம்நாட்டின் ஆக்கங்கருதியாவன காட்டும் கடப்பாடு" என்பதனைமறுது நீங்கள் ஏற்றே தீரவேண்டும்.

நீங்கள் எழுவராக இருப்பீரேல் நம் செல்வர்கள் பயனிலை யாக நிற்பார்கள். ஆங்கே நாட்டின் ஆக்கவினை முற்றும்.

யான் இக் கட்டுரை வரைய இறங்குவது, நம்நாட்டின் பழங்காலப் பெருமையைப் பாராட்டி அவ்வளவில் மகிழ்ந்து அமைவதற்கல்ல. அக்காலப் புலவர்களின் மனப்பாங்குகளையும் வாழ்க்கை நோக்கங்களையும் இக்காலப் புலவர்கள் உள்ளத்திற் பதித்து அவர்கள் கடமையை நிறைவேற்றத் தூண்டுதற்கும், முற்காலச் செல்வர்கள் செய்கைகளைக் கிளந்துகூறி இந்நாட்டுச் செல்வர்கள் எண்ணத்திலேற்றி நாட்டின் சீர்கேட்டை நீக்கி நன்னிலைமைக்குக் கொணரும் வழியில் ஊக்குதற்குமேயாம்.

இனி எடுத்த பொருண்மேற் செல்வோம்.

(க) பழந்தமிழ்ப் பாவலர் வாழ்க்கை நிலை.

இக் காலத்திற்போல முற்காலத்தில் கல்வியறிவுசான்ற பெரியோர்கள் பலரும், அரசியற்றுறையில் ஆளுகை விரும்பித் தம்மை அடிமையாக்கிக்கொள்ள முற்பட்டிருந்தாரல்லர். "தொழுதூண் சுவையின் உழுதூணினிது". "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" "பழுதுண்டு வேறோர் பணிக்கு" என உழவுத் தொழிலே சிறந்ததெனக்கூறி மக்களைத் தெருட்டியும் தாமும் ஆங்கே நடந்தும் வந்தனர். புலவர்கட்கு வழங்கும் பெயர்களிற் சில அவர் செய்துவந்த தொழிலோடும் இணைக்கப் பெற்றிருத்தல் கொண்டு அவர்கள் மேற்கொண்டிருந்த தொழில் இஃதென்றும் காண இயலும். அறுவை வாணிகர் இளவேட்டனார், கூலவாணிகன் சாத்தனார், கணக்காயனார் (உபாத்தியாயர்) மகனார் நக்கிரனார், மருத்துவன் தாமோதரனார் என்பனபோல்வன அவரவர் தொழிலை விளக்குவனவாம்.

கடவுள் படைப்பிலேயே, இந்நாடு உழவுத்தொழிற்கென்றே ஆக்கினாற்போன்று, இயற்கையாகவே நிலவளமும் நீர்வளமும், ஒத்தவெட்பமும் தட்பமும் பொருந்தி, தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளையப் புனல்பரந்து பொன்கொழிக்கும் நாடாக விளங்குவது. ஆகலானே "இலமென் றசைஇ யிருப் பாரைக் காணின்-நிலமென்னும் நல்லாள் நகும்" எனப்பொய்யா மொழிப்புலவர் கூறுவாராயினர். மற்றும் இஞ்ஞான்றிற்போல அக்காலத்தில் அரசியற்றுறைகள் மிக மிக விரிந்து நாட்டின் பொருளை உறிஞ்சுவனவாக இல்லை. ஊர்கடோறும் செலவின்றி அறங்கூறவையமும், வழக்குத் தீர்க்குமன்றங்களும் நிகழ்ச்சிகளை நேரிற்கண்டு முறைசெய்யும் சிற்றரசுகளும் ஏவலர்களும் நிறைந்திருந்தமையின் குடிமக்கள் கைப்பொருட்கள் அவம் கழியாது வாழ்க்கை மேம்படவுதவின.

புலவர்களின கல்விப்பெருக்கமும் வாழ்க்கை நெறியும், பொதுமக்கட்கு அறம்புகட்டவும், அடாதனசெய்யும் அரசரை

இடித்துக்கூறி அலர் தூற்றுமுகத்தான் நல்லறிவுகொளுத்தவும், பிறர்க்குதவும் வண்மைச் செல்வர்களின் நற்புகழை நாடெங்கும் பரப்பி வளர்க்கவும், அதுகண்டு பிறரும் புகழ் விரும்பி அவ்வாறு நல்வழிப்படரவும் பெரிதும் உதவின. இயற்கை வளங்களை எடுத்திசைத்தலில் நிகரற்ற நல்லிசைப்புலவர்களிற் பலர் வறுமைகூர்ந்திருந்தது, தமிழ்நாட்டின் ஆக்கம் பெருக்கும் வழியில் அவர்கள் முனைவதற்கு இடம்தந்தது. தங்கள் வறுமை தீர்க்கும் வள்ளற் செல்வரை நாடிச்சென்று, தம் கல்வித்திறத்தைக்காட்டி, மகிழ்ந்து வழங்கும் பரிசில்களை ஏற்று, அவர்கள் நடத்தைகளிற் றீயவற்றைக்கடிந்து, நல்லவைகளை மென்மேலும் புரிந்து இசையொடு வாழ்கவென வாழ்த்தி, மதிப்புடன் வாழ்ந்துவந்தனர். பரிசிலேற்கும் வாழ்க்கையைச் சிறுமையுடைத்தென அவர்கள் முனிந்தாருமல்லர். ஏனெனில் அரசர்களும் பிறசெல்வரும், தமது தாய் மொழியை வளம்படுக்குநரென்றும், அம்மொழியின் நலங்கனிந்த சொன்னயம் பொருணயங்களைக் கவி வடிவத்தில் அமைத்துத் தமக்குச் செவி விருந்தளிக்கும் சீரியோரென்றும், அவ்வப்போது தங்கட்கு அறமும் நீதியும் ஆக்கமும் கூறி நல்வழிப்படுத்தும் பெரியோரென்றும், தமது சீரும் சிறப்பும் சென்ற இடந்தோறும் கூறிப் புகழ் மேம்படுக்கும் புனிதர்களென்றும் அப்புலவர்களை எதிர்கொண்டு வரவேற்று முகமன் கூறி இருக்கை ஈந்து ஈகைக் கடப்பாட்டை வரையாது உதவிவந்த பெருஞ் சிறப்பினாலேயாம். இக்காலத்து அரசர்மொழி வேறுதலின் அம்மொழியே நன்கு மதிப்பெய்துவதாகித் தமிழும் தமிழ்ப்புலவரும் புறக்கணிக்கப்பட நேர்ந்ததால் பரிசில் பெறுவோரும் தருவோரும் அரியராயினர். அக்காலத்துப் புலவர்கட்கு அரசர் செய்புஞ் சிறப்புக்களை, விளக்கும் வகையில், பரிசில்பெற்று மீள்வானொரு புலவன், வழியில் எதிர்ப்பட்டுப் பரிசிற்குச் செல்வோனொருவனை நோக்கி 'ஆற்றுப்படை' என்னும் பொருட்டுறையில், "அம்மன்னன்பாற் செல்லின், நும்மில் போல நில்லாது புக்கு, கிழவிர்போலக் கேளாது கெழீஇ, வேண்டுமிடந்தோறும் உணவு பெறுகுவீர்; பொன்னுலியன்ற பூவை வெள்ளி நாராற்றொடுத்துத் தலைமிசை புனையப்பெறுவீர்;

யானைகளையும் குதிரைகளோடு தேர்களையும் திரள் திரளாகப் பெற்று நம்மைக் காண்போர் இவர் எந்நாட்டரசரோ என வியக்குமாறு மீள்வீர்" எனக்கூறுதல் பண்டை நூற்களிற் பலவிடங்களிலும் காணப்படும்.

இவ்வகைச் சிறந்த பரிசில் பெறினும், நம் பண்டைப் புலவர், இக்காலத்துச் சிலர்போலக் கொடுப்போர் குறிப்பின் வழிச்சென்று, இச்சைபல சொல்லி இடித்துண்ணலை அறிந்திலர். தங்கள் வறுமையை உள்ளவாறே கூறிப் பரிசில் கடாவுதற்குப் பின் வாங்குபவருமல்லர். எங்குச் சென்றாலும், தம் தகுதியறிந்துதரும் வள்ளற் செல்வர்கள் பலர் இருக்கின்றார்களென்னும் துணிவும், நிரம்பப்பெற்றுச் சிக்கனமாக வாழ்வோமென்னும் அவாவின்மையும், பரிசிற் பொருளைத் தாமும் பிறர்க்கு வரையாது வழங்கும் கடப்பாடும், நண்ணார் நாண அண்ணாந்தேகும்படி அவர்களுக்குப் பெருமை தந்தன. "பெருக்கத்து வேண்டும் பணிவு, சிறிய-சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்னும் தமிழ்மறைக்கு அவர்கள் நடத்தை இலக்கியமாக அமைந்தது.

ஓர் புலவர் தமது வறுமையைக் கூசாது உள்ளவாறு எங்ஙனம் கூறுகின்றார், பாருங்கள் !

இல்லுணாத் துறத்தலின் இன்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்தும் மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவின்
அல்ல லுழப் போள்......................

எனத் தன் மனைவிபடும் வறுமைத்துன்பத்தை நாம் நேரிற் கண்டாற்போல் காட்டியிருக்கின்றார். அதாவது :—" தமது

ஓரும் புதல்வன் வீட்டிலுண்ணச் சிறிதுணவுமின்றித் தாயின் வறுமுலையைப் பலதரம் சுவைத்தும், (அவளும் பன்னுட்பட்டினி கிடப்பவளாதலின்) பாலின்மையால் அதைவிட்டுக் கூழேனும் சோறேனும் உளதோ? எனப் பாண்டங்களை வரிசையாகத் திறந்து பார்த்தும், யாதும் தென்படாமையால் அழத்தொடங்க, அதனை நோக்கலாற்றாதமனையோள், அவ்வழுகையைமாற்ற அதோ "புலி, புலி" என்று அச்சுறுத்தினளாக, அம்மகவு வெருண்டு மிகவும் அஞ்சுதல்கண்டு திகிலைமாற்ற "இல்லை! கண்ணே! வானில் பார்! அம்புலியை" என்று அன்புகூரக் காட்டியும், இன்னோரன்ன பல சூழ்ச்சிகள் செய்தும், அவன் வயிற்றைப் பிசைந்து தின்னும் பசியை நீக்காமையினால் மிகவும் நொந்து, உன் தந்தைக்கு உன் உடல் மெலிவைக் காட்டுக எனச் செலுத்தி, நனவில் அடையும் அவ்வறுமைப் போராட்டத்தையே கனவிலும் துய்க்கின்றாள் என்மனைவி எனக் கூறியது நம்முள்ளஞ் சுடுவதோர் தன்மையதே யன்றோ? பெருந்தலைச் சித்தனார் என்னும் வேறொரு புலவர், தன் வீட்டின் நிலைமையைக் கூறுமிடத்து, "அடுதற்றொழிலை நெடுநாளாக மறந்துவிட்ட அடுப்பில் காளாம்பி பூத்திருக்கின்றது. பசி நோய் தின்ன வருந்திப், பால் சுரவாமல் தோலோடு திரங்கி வயிற்றின்மேல் மடிந்து வீழ்ந்து பால் தோன்றும் இல்லிக்கண்ணும் தூர்ந்து தாழும் தாய் முலையைச் சுவைக்குந்தோறும் பால் பெறாதழும் அருமை மகவை உற்று நோக்கிக் கண்ணீர் பெருக்குகின்ற மனைவி" என வெளியிடுகின்றார். இத்தகைய பெருமிடி சூழ்ந்து பல துன்பம் பெருக்கினும், அவர்களது மனப்பாங்கு எத்துணை திட்பமும் உரனும், அசைவின்மையும், செப்பமும் உடையதாயிருந்ததென்பதை நோக்கின், நமக்கு மிக வியப்பும் மருட்கையும் உண்டாக்கும். அஃதன்றோ அவர்கள் கல்வியறிவின் பெருமிதத்துணிவு! வறுமையிற் செம்மை எனப்படுவதும் அஃதே !!

ஓர் புலவர் கூறுவதைக் கேண்மின்! எனது அன்னையோ, இன்னும் வாழ்நாள் மிக்கிருத்தலின், உயிர் செல்லாமைக்கு வருந்திக் கைப்பற்றிய கோலையே காலாகக் கொண்டியங்கி,

முற்றத்தினின்றும் நடக்கக்கூடாத முதியவள். என் மனைவியோ இடையில் இடுக்கிக் கொண்டிருக்கும் பல சிறு குழந்தைகள் பிசைந்து மென்று தின்பதனால் உலர்ந்த கொங்கையினளாய், அழுக்கேறிப் பல வேற்று நூல் இடைஇடையே நுழையப் பெற்ற (தைக்கப்பட்ட) சிறிய ஆடையை உடுத்து, குப்பைக் கீரையை உப்பின்றி அவித்து உண்டு அறக்கடவுளைப் பழித்துக் கொண்டு பட்டினியால் நாடோறும் மெலிகின்றவள். என் வாழ்க்கைநிலை யீதாயினும், நீ முகம் மாறித்தரும் பரிசில் மதம் பட்ட யானையேயாயினும் கொள்வேனல்லேன். மனமகிழ்ந்துதவும் பொருள், குன்றியளவேயாயினும் பெரிதெனக் கொள்வேன் என்கின்றார். எவ்வளவு பெருகிய வறுமையினும் 'தமது பெருமையை—நன்குமதிப்பை—இழக்காது நிற்கும் அவர்கள் துணிவுதான் என்னே!

"பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே" என்றொரு

புலவர் மொழிவதால், தாம் பாடற்கேற்ப நற்குணமும் ஈகையும் இல்லாத பிறசெல்வர்களைப் பாடிப்பரிசில் பெற்றுவாழ அவர்கள் நினைப்பதில்லை என்று தெரிகிறது. மற்றொரு புலவர் :- "பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்-செய்யா கூறிக் கிளத்தல்-எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" என்கிறார்.

அட! இஃதென்ன வன்மை! பரிசில் தருவோரையெல்லாம் பாடுவதொழிந்து அவர்களிடத்து நற்குண நற்செய்கைகள் காணப்பட்டாலொழிய இல்லாதவற்றை இருப்பதெனக்கூறுவது எங்கள் நாக்குக்கு வழக்கமில்லை, அறியாது என்கின்றார். அப் புலவர்கள் உண்மையின்மேற் கொண்ட அழுத்தமான அவா எப்படிப்பட்டதென நோக்குமின்!

ஓர் செல்வர் "தம்மைக் குறித்து ஒரு புகழ்க்கவி பாடும்படி ஒரு புலவரை வேண்ட, அப்புலவர், தமக்கு நிரம்பப் பொருள் வருவதறிந்தும்,

"மூவா கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
என்னையும் பாடுக வென்றனை யாங்ஙனம்
பாடுது மியாங் களிறுபடு செங்களங்
கண்ணிற் காணீர், ...
இலவ வாய்ச்சியர் இளமுலை புல்லீர்...........
உடீஇ ருண்ணீர் கொடீஇர் கொள்ளீர்..........." என

மறுத்துவிட்டனர்.

புலவர்கள் அரசர் முதலானவர்களைப் பாடுவது புறப் பொருள், அகப்பொருள் என்னும் இருவகைப் பொருள் இயல்பு கொண்டே. புறப்பொருட்டுறைகளில், ஏதேனும் ஓர் போர்க் களத்துச் சென்று போர்புரிந்து வெற்றியொடு பூண்ட வீரனுக விருந்தாலன்றிப் பாட இலக்கணமில்லை.

அகப்பொருளிலோ, நலத்தகுபண்பின் மனைக்கிழத்தியைக் கடிமணம் புரிந்து ஊடிக்கூடி இல்லறம் நடாத்துந் தகுதியிருந்தா லன்றிப் பாட வழியில்லை. அல்லது புறப்பொருட் பாடாண்டிணை களில் எங்கேனும் உம்மை நுழைத்துப்பாட இடங்கிடைக்குமா வென்று பார்த்தாலும் நீர் ஏவர்க்கேனும் கொடைவழங்கிப் புகழ் கொண்டீருமல்லீர். இவ்வகையால் உம்மை, யான் பொய்க் கூற்றால் புகழ் புனைந்துகூற முடியாதென்றனர். இவ்வகை உண்மை நெறியில் தவறுது ஒழுகிய அக்காலப் புலவர்கள் போலாது இக்காலப் புலவர்களில் ஒருவர் கூறுவ தொன்றையும் காண்மின் !

"கல்லாத ஒருவனைநான் கற்று யென்றேன்
காடாளும் மறவனைநா டாள்வா யென்றேன்
...., ...
இலலாது சொன்னேனுக் கில்லை யென்முன்
யானுமென் றன் குற்றத்தால் ஏகு வேனே."

இங்ஙனம் பொய்யும் புனைந்துரையுங் கூறினும் ஈவோரின்றி இழுக்குற்றெழிவது பிற்காலப் புலவர் வழக்கமாயிற்று.

முற்றிய தருவின் மூவ ரர்யினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே.

....

கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரோ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே.

"கடலைச்சூழ்ந்த மேகம் எப்படி அதன் நீரைக்கொள்ளாமற் போகாதோ அவ்வாறே தேரையும் யானைகளையுக் புரவலர்களிடத்திற் பெறுமல் இப்பரிசிலர் சுற்றம் வெறுங்கையாய்ப் போகமாட்டா என்றுரைப்பதற்கு அவர்கள் பிடிவாதமும் துணிவும் செல்வரிடத்திற் சலுகையும், எவ்வளவிருந்திருக்க வேண்டும்? தகுதி யறிந்துதவும் தமிழ்ப் பெருஞ் செல்வர்கள் பலரிருந்ததனுலன்றே அவர் அங்ஙனம் உரைத்திடலானர்.

பெருஞ் சித்திரனர் என்பவர், இளவெளிமான் என்னும் செல்வர், சிறிது பொருள் கொடுததனைப் பெருது வெறுத்து, "எனது நெஞ்சமே! எழுக, யாம் போவோம். கண்ணுற் பருகுவதுபோலக் கனிவுடன் நோக்கி, அகன் நகுவாரா முகன் அழி பரிசிலை ஊக்கமில்லாதாரே ஏற்க விரும்புவர். இவ்வுலகமோ பெரிது. தமிழருமை தெரிந்து கொடுப்பவரும் மிகப் பலரே" எனப்புலக்கின்றுர்.

அப்புலவர், தமக்கு, அதியமான் நெடுமானஞ்சி நேரில் வந்து தன்கைப்படப் பரிசில் கொடாது பிறர்பால் யாதோ பரிசிலை யனுப்பினனென்று சினந்து,

என்னை—யாங்கறிந் தனனே தாங்கருங் காவலன்
காணு தீத்த விப்பொருட் கியானேர்
வாணிகப் பரிசிலே னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே- என்று மறுத்து

விட்டனர். பரிசில் தர நீட்டித்த ஒரு சேர மன்னனை நோக்கிப் பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர், "உம்மைப்போலவே

பலரும் நடப்பாராயின், எம்மைப்போன்ற பரிசிலர் இவ்வுலகிற் பிறவாதொழியக் கடவர்" என்று அலர் தூற்றுகின்றார்.

இவ்வாற்றால் நல்லிசை நாவலர் தம் வறுமைக்காகவன்று, வரிசை தெரிந்து தரும் பரிசிலுக்காகவே வருந்துவாராயினரென்று அறியலாம்.

ஔவையார் என்னும் பெருமாட்டியார், பரிசில் நீட்டித்த அதியமானஞ்சியை வெறுத்து அவன் வாயிற் காவலனை நோக்கி,

வாயி லோயே! வாயி லோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
முன்னியது முடிக்கும் முரணுடை யுள்ளத்து........
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோ யே!
....
அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனால்
....
மரங்கொ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.

என்று கூறிய நெஞ்சத்துணிவு எத்துணை பாராட்டற்குரியது!

"யாம் கூறும் மொழிக்கு மறுமாற்றந்தராதிருக்கும் வாயில்லாதவனாகிய வாயிற்காவலனே கேள்! வள்ளற்றன்மையுடைய செல்வர்களுக்கு, இம்மை மறுமைகட்கு ஆக்கந்தரும் பொன்னனைய விழுத்தகுமொழிகளை அவர் செவியாகிய நிலத்தில் விதைத்து, அதனால் பெறுதற்குரிய விளைவுகளை அச்செல்வர்கள் கருத்தின்படியன்றிப் பரிசிலர்களாகிய எங்கள் எண்ணப்படியே முடித்துக்கொள்ளும் மாறுபாடுற்ற திண்ணிய நெஞ்சத்தினால், வரிசை நாடி வருந்தி நிற்கும் என்போலும் பரிசிலர்க்கு என்றும் அடைக்கப்படாத வாயிற்காவலனே! நீசென்றுஉன் அரசனுக்கு யான் நெடுநேரம் இங்குக் காத்திருக்கும் செய்தியைச் சொல்; அவன் இன்னும் நீட்டிப்பின், இதோ யாம் செல்வேம். அறிவும்

புகழ் விருப்பமும் உடையோர்கள் இவ்வுலகில் இல்லாது இறந்தொழிந்தாருமல்லர். எங்கட்கென்ன குறை? ஓர் தச்சனுடைய மக்கள் வாய்ச்சி யென்னும் கருவியை எடுத்துக்கொண்டு காட்டகத்தில் புகுந்து எப்படிச்சிறிய மரங்களையும் கைத்திறமையால் பல கருவிகளாக உருப்படுத்து அதிகவிலைக்கு விற்று வாழ்வார்களோ அவ்வண்ணமே யாங்கள் எத்திசையில் சென்றாலும் சோறு எங்கட்கு மிகவும் எளிதில் கிடைக்கும் என்றுரைத்தனர். இதினின்றும், நம் நாவலர்கள், பல்காற் கற்றும் கேட்டும் ஆய்ந்தும் கண்ட அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகை உறுதிப் பொருட்களின் விழுமிய பகுதிகளைச் செல்வர்கள் செவியில் இனிமைபெற அவர்களின் இம்மை மறுமைகளை இன்பமயமாக்கும் பொருட்டு நன்கெடுத்துக் கூறுவதற்காகப் பெறுங்கைக் கூலியாகப் பரிசிலைக் கருதினர்களேயல்லாது, இல்லோர் இடித்திரக்கும் இரப்பாகக்கொண்டில ரென்றும், தாங்கள் கருதிய பரிசிலையே கைநீட்டிப் பெறுதலன்றிக் கொடுப்போர் கருத்தின்படிக் கொள்பவர்கள் அல்லரென்றும், அறிவும் புகழுமுடைய செல்வப் புரவலர் புலவர்களை உவந்தேற்பப்பலர் மலிந்திருந்தனரென்றும், எங்குச் சென்றாலும் அவர்கட்கு நல்லவிருந்தும் கைந்நிறையப் பொன்னுங் கிடைத்து வந்ததென்றும், செல்வர்களை அவர்கள் நற்குணங்கட்கும் விழுமிய செய்கைகட்கும் பாராட்டுவதன்றித் தமக்கு நல்கும் பரிசிலை மட்டும் கருதிப் புகழ்வது அக்காலத்தில் வழக்கமில்லை யென்றும், அதிகார தோரணையிற் கேட்போர் போலப் பரிசில்கடாவும் மிடுக்கு, அவர்களது கள்ளமற்ற நற்குணத்தையும் கல்விக்கு உலகம் அளித்திருந்த பெருமையையும் நன்கு விளக்குகின்றதென்றும் ஊகிக்க இடந்தருகின்றன.

மற்றும் நம்பாவலர்கள், அரசர்கள்பாலேயன்றி மிக எளிய வாழ்க்கை பெற்ற குடிகளிடத்தும்! சென்று பழகி நட்புக்கொண்டு அவர்கள் வறுமையின் வாழ்விலும் பங்குபெற்று மகிழ்வாருமாயிருந்தனர்

மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோவிலமே

எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறாஉஞ்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்து
முணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே.

எனக்கூறிய புலவர் கருத்தை நோக்கின் என்ன புலப்படு கின்றது? பெருஞ் செல்வர்களையடுத்து மதிப்புற வாழ நினையாது எத்துணைச் சிறிய பொருள் கிடைப்பினும் அகமகிழ்ந்து தருவ தனையே பெரிதாகக் கையேற்றுக்கொண்டு, அமைந்து வாழ விரும்பிய அவர்கள் அவாவின்மையும், அடக்கமும், உண்மை யன்பும் வெளிப்படுகின்றவன்றோ? உணர்ச்சியற்ற மூடர் களுடைய செல்வத்தை மதியாமல் நல்லறிவுடையோர் நல் குரவை உள்ளங் களிகூர உவந்து மதிக்கும் அவர்களின் மனத்தின் நலம் மிக்க மாட்சித் திட்பம் யாதான் வந்தது என்றாய்தல் வேண்டும்.

"கணியன் பூங்குன்றன்" என்னும் பேரறிஞர் கூறிய பின் வரும் அருமையும் பெருமையும் மிக்க செய்யுளை நோக்குவோம்.

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே...............
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்

காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

"எமக்கு எல்லாவூர்களும் மதிப்புத் தருதலால் சொந்தவூர் களேயாகின்றன. எல்லா மக்களும் உயிர்கள் என்னும் பொதுமைபற்றி உறவினர்களேயாகின்றனர். ஒருவர்க்கொருவர் தீங்கையோ நன்மைகளையோ செய்தலியலாது, அவை, வினைத் தொடர்பு ஒருவரை ஏவுதலான் எய்துவனவாகலின். துன்பமுறுத லும், உறுமையும் அஃதொப்பவே. இறத்தலும் இவ்வுலகிற்குப் புதியதன்று, கருவுற்ற நாண் முதற்றொடங்கியுள்ள பழைமையதே. ஆகலின் வாழ்தலை இனிதென உவத்தலும் துன்பத்தை வெறுத்தலும் செய்யேம். பெரியதோர் யாற்றின் நீர்ப்பெருக்குச்செல்லும் வழியே ஈர்ப்புண்டு செல்லுந்தெப்பமே போல எல்லாவுயிர்களும் பண்டை வினைவழி வந்த ஊழின் வழிப்பட்டொழுகு மென்னும் இப்பெரியதோர் உண்மைப் பொருளைத், தெளிந்தோர் அழுந்தி யறிந்துணர்த்தியவாற்றால் உறுதிப்பட அறிந்தோம். இவற்றால், நன்மைமிக்கவரைப் பெரிதாகத் துதித்து மதிப்பதுமில்லேம். தாழ்ந்தோரை இகழ்தல் அதனினுமில்லேம்; அஃதவரவர்கள் இயற்கையெனக் கொண்டு." என்று கூறிய இம்முடிபை மேற்கொண்ட வுள்ளம் எதற்கு, என் அஞ்சும்? உண்மைக்கு என் மாறுபடும்? இத்தகைய பேரறிஞர்களை அடிதொழுது வரவேற்க நம் நாடு முற்பட்டது வியப்பாகுமா? இங்ஙனம் உள்ளத் துணிவுமிக்க புலவர்களை நம் நாடிழந்துபோய் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயினவன்றே!

எத்துணை வறுமையுள் மூழ்கினும் மதிப்பை யிழவாமல் வாழ்ந்த நம் புலவர்கள், பெரும்பரிசுபெற்றகாலையில் செட்டாகச் செலவிட்டுப் பொருள் சேர்க்க முயன்றனரா? அது தானு மில்லையே! "ஏற்றுக உலையே ஆக்குக சோறே" என ஆரவாரித்து மனையாளை விளித்து, "நின்னை விரும்பி வாழ் வின்றோர்க்கும், நின்னால் விரும்பப்பட்டவர்களுக்கும், பிறர்க்கும், இதன் முன்னே உனக்குக் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்,

இன்னோர்க்கென்னாது என்னொடுஞ் சூழாது, பின்னாகுமென்று பிடித்து வல்லாங்கு வாழ்தும் என்றும் கருதாமல் எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழவோயே! எனக்கூறி ஓம்பாதுண்டு கூம்பாது வீசும் பெருந்தகையினராக வாழ்ந்தனரெனின் அவர்கள் தெளிவுசான்ற நெஞ்சத்தின் வியத்தகு மாட்சி விளம்பலாந் தரத்ததன்றென்க.

(தொடரும்.)

பரணர்.

திரு. வித்துவான் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக் கலாசாலை, திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி துணர் 6. பக்கம் 449.)

வையாவிக் கோப் பெரும் பேகன்.

இவன், "பெருங்கல் நாடன் பேகன்" என்று சிறப்பிக்கப் படுதலால், மலைநாட்டிலிருந்த வள்ளல் என்பது பெறுதும். இவனும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் பாராட்டப் படுகின்றான். மேலும், "அது மன் எம்பரிசில் ஆவியர் கோவே" எனவும், "அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் பேகன்" எனவும் வழங்கப்படுதலால், ஆவியர் குடியிற் பிறந்தவன் என்பதும் பெறுதும்.

ஆவியர் என்பார் அதியர் போன்ற ஒரு குடியினராவர். அதியர் என்பார் அதிகை என்னும் ஊரிற் றோன்றினவர்;

அவர்கள் அதிகையர் என வழங்கப்பெற்றுப் பின்னர் அதியர் என மரூஉமொழியால் வழங்கப் படலாயினர் என்பர் சில அறிஞர். அவர்களைப்போல, இவர்தம் தொடக்க வரலாறு அறியக்கூடவில்லை; சிலர், "முனைஅது, முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" என்றும் "உருவக் குதிரை மழவ ரோட்டிய, முருகன் நற்போர் நெடுவே ளாவி, அறுகோடியானைப் பொதினி" என்றும் வரும் வழக்காறு கொண்டு, இந்த ஆவியென்பான் குடியில் வந்தோர் ஆவியர் என வழங்கப்பட்டார் என்று கோடல் நேரிது என்பர். வேறுசிலர் நெடுவேளாவி என்ற சொற்றொடர்க்கு அகநானூற்று அரும்பத வுரைகாரர் "ஆவிநெடுவேள் -குறுநில மன்னன்" என்று கூறுதலை ஆவியர் குலத்து நெடுவேள் எனக்கொண்டு அக்குலமுதல் விளங்கிற்றன்று என்றும் கூறுவர்.

வேளாவியே ஆவியர்குலத்து முதல்வனாவான் என்று கொண்டு, அவனது நகரமான பொதினி யென்பது இப்போயதை பழனி என்றும், அதுவே பேகனுக்கும் நகராமென்றும், அங்குள்ள வையாவிக்குளம் பேகனுக்கு அந்நகர்க்குள்ள உரிமையை வற்புறுத்தும் என்றும் பலரும் கொள்ளுகின்றனர்.

இனி, இப் பேகனது மலைநாடு தீவிய நீரோடும் அருவிகளும் மலைவளம் சிறத்தலால் குறவர் குடிவாழும் மேன்மையும் உடையது. இம்மலை நலத்தை, ஆசிரியர் பரணர், "பூமலிந்து, அருவி யார்க்கும் அயந்திகழ் சிலம்பின், நுண்பல் துவலை புதன் மிசை நனைக்கும், வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன், கொண்டகன் மாமலை" என்று கூறுகின்றார். இம் மலைவாழ் குறவர் மழைவேண்டுங் காலத்துப் பெய்வித்தற்கும், வேண்டாக் காலத்து ஒழித்தற்கும் பலி தூவிக் குறவர்கடவுளைப் பரவுவர். இது இக்காலத்துப் பர்மியர்களால் கையாளப்பெற்று வருகின்றது. * இது ஆசிரியர் கபிலரால்,

"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரிஆன்று மழைமேக் குயர்கெனக்

---

* "A Trip to Burma"—Cap. Gilbert. pp. 69—70.

கடவுட் பேணிய குறவர் மாக்கள்" (புறம். 143) எனப் பாராட்டப் படுகின்றது.

ஒருகால் இவன் உலாப்போந்தவன் குளிர்ந்த வாடைவீசவும், விசும்பின் முகிற்குலம் திரண்டு மூடிக்கொள்ளவும், அதுகண்டு மயிலொன்று தன் தோகையை விரித்தாடுதலைக் கண்ணுற்று மகிழ்வுற்றான். பின்னர் அவன் அதன்மாட்டு இரக்கங்கொண்டு, அது குளிராற் பனிக்குமென்று எண்ணிப் போர்வை ஒன்றைத் தந்து போந்தான். இச் செய்கையறிந்த புலவர் பெருமக்கள் யாவரும்,

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" எனவும்,

"உடாஅ போரா ஆகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்" எனவும் கூறிப்

புகழ்வாராயினர். இங்ஙனம், மயிலையும் தன்னையொப்பக்கருதி, அதற்குப் போர்வை தந்து பேரருள் செய்தவள்ளல் ஏனை இரவலர்க்கு வேண்டுவன ஈதல் ஓர் அரிய செயலாகுமோ? இது பற்றியே, ஆசிரியர், இவனை,

"அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅயானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே" எனப்

பழிப்பது போன்று புகழ்ந்து பாராட்டினர். இங்ஙனம் கொடைமடம் படுதலும், மறுமை குறித்தாதல், புகழ்குறித்தாதல் அன்று; "பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மை" என்ப.

இவ்வண்ணம் கொடையினலுயர்ந்த வள்ளலாகிய பேகன், ஒருகால், தன்மனைவி, கண்ணகி என்பாளை மறந்து வேறே ஒருத்தியின் நலன் நயந்து அவளுறைறையும் நல்லூருக்கு அடிக்கடி சென்று வரலாயினன். இதனையுணர்ந்த கண்ணகி, தன் கணவனது பிரிவாற்ருது மிகமிக வருந்துவாளாஞள். இவள் செய்கையுணர்ந்த புலவர் பெருமக்கள் இவ்விருவரையும் கூட்டிவைக்க முயன்று, தம் சதுரப்பாட்டினல், வென்று, இருவரும் நல்ல இன்பவாழ்வு பண்டேபோல் நடாத்தக்கண்டு களிப்பெய்தினர். இம்முயற்சியில் முயன்ற பெருமக்கள் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் முதலியோராவர்.

இவருட்கபிலர், "பேக! என் ஒக்கல் பசியால் வருந்துவது கண்டு நின்னையுள்ளிவந்து நின்னையும் நின்மலையையும் யாம் பாடினேம். அதுகண்டு, ஒருத்தி கண்ணீர் முலையகம் நனைப்ப விம்மிக் குழல் இனைவது போல் பெரிதும் அழுதனள். அவள் யார்கொல்! அவள்பால் நீ அருள்பண்ணத்தகும்" என்றும், நின் மலையிற் குறமக்கள் கடவுட்பேணி மழைவேண்டிய பொழுது பெற்றுத் தாம் வேண்டும் உணவும் நுகருமாறுபோல இவளும் நின் அருள்பெற்று இன்பம் நுகர்வாளாக வேண்டும் என்பதொரு நயமும் தோன்றப்பாடினர். அப்பாட்டுப் புறத்தில் "மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்" எனத்தொடங்குவது.

பரணரது பாட்டுப் பின்னர் அவர் பாடல்களின் ஆராய்ச்சியிற் கூறப்படும்.

அரிசில்கிழார், "ஏ! அடுபோர்ப் பேக! நின் அருங்கல வெறுக்கைகளாகிய அவை பெறல் வேண்டேம்; மற்று, நின் வன்புல நன்னாடு பாடியதற்காக என்னை நீ நயந்து பரிசில் நல்குவையாயின், நீ நல்காமையினல் கண்டார் இரங்க மெலிந்து அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவை தன் கூந்தற் கண் புகை கொளுவி நின் தண்கமழ் கோதை புனையும் வகை நெடுந்தேர் பூண்டு சென்று, அவளை அருள்வாயாக" என்று கூறினர். ஆசிரியர் பெருங்குன்றூர் கிழாரும் இவரைப் போலவே, பரிசில் வேண்டாது, கண்ணகிமாட்டு அவன் செய்யும் அரு

ளே தனக்குப் பரிசிலாவது என்று கூறினர். இவ்விருவர் பாடல்களும் புறத்தில், முறையே, "அன்னவாக நின் அருங் கல வெறுக்கை" எனவும், "கன் முழை யருவிப் பன்மலை நீந்தி" எனவும் தொடங்குகின்றன.

மதிப்புரைகள்.

க. மதுரைச் சோக்கநாதர் உலா.

தமிழ் மொழிக்குச் சிறப்பு நூல் ஆகிய உலா வகையுட் சேர்ந்த இது, 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்த புராணத்திருமலை நாதர் எனும் பெரும்புலவர் இயற்றியது. திருப்பனந்தாள் காசிமடத்து அடிகளும், தமிழ்த்தாயின் தவப்பேறும், தமிழ்ப் புலவர்களின் தாயருமாகிய உயர்தனிச் செம்மலார் காசிவாசி சாமிநாத சுவாமிகள், தொடர்புறச் செய்துவரும் நூல் வெளியீட்டறங்களில் ஒன்ருக வெளிவந்திருப்பது. தமிழ்ப் பெரியார் உயர்திரு. உ. வே. சாமிநாதையரவர்கள் குறிப்புரையுடன் மிளிர்வது.

ஐயரவர்கள். பதிப்பெனின், அதன் தனிச்சீரினை எடுத்துரைத்தல் என்னை! வழக்கம்போல், குறிப்புரையில் இடந்தொறும் இடந்தொறும் காணப்படும் அவர்களது ஆழ்ந்தகன்ற பயிற்சியும் நினைவாற்றலும் படிப்பார்க்கு வியப்பினைத் தந்து மகிழ்விப்பன. இக்குறிப்புரை யின்றேல் பல கண்ணிகளுக்கு மெய்ப்பொருள் காண்பதரிது; 'மதுரை திரு வாலவா யானதுவும்' வரைமகடான் வீற்றிருந்த வாறு' என்றாற் போன்ற இடங்களில் 'வாலவாய்' 'வாறு' முதலாய சொற்களின் உண்மையுருவங்களே புலப்படா. இங்ஙனமாகிய இதன் தனிச்சீர்கள் விரிப்பிற் பெருகுவன.

இந்நூலும் குறிப்புரையும் தீம்பால் பெய்த பைம் பொற் செப்பெனத் திகழ்தலின், கற்றோர் எவரும் கையிலேந்திக் கண்ணி லொற்றித் தலைமிசைக் கொள்ளத் தக்கனவாகும்.

உ. திருக்குறட் குமரேச வெண்பா.

(7-வது தொகுதி 8-வது புத்தகம்.)

தூத்துக்குடித் தமிழ்ப் புலவர் திரு. சேகவீரபாண்டியக் கவிராயரவர்கள் இயற்றிவரும் தாய்மொழித் தொண்டாகிய திருக்குறட் குமரேச வெண்பாவின் 'உட்பகை' எனும் அதிகாரத் தினைக் கொண்டதோர் பகுதி இதுபோது வந்துற்றது. 'கல்வி யே கற்புடைப் பெண்டிர் - - -' என்ற அருமைச் செய்யுட் கிலக்காகி, கல்வி, கவிவன்மை, விரிவுரையியற்றுந் திறன் ஆகிய செல்வங்களை, ஒருங்கெய்திய கவிராயரவர்கள் செய்துவரும் இத்தொண்டு முற்றுங்கால், இது, தம்தாய்மொழிக்குச் செய்ய வேண்டும் கடமையைச் செய்து முடித்ததாகும்.

பரிமேலழகரே சில பல குறள்களைத் தொகுத்து, இவை யின்ன பொருளைக் கூறுகின்றன என எழுதிச் செல்லவும், நம் கவிராயரவர்கள் ஒவ்வொரு குறளுக்கும் தனிக்கருத்துக் கூறி, இக்காலத்துக் கட்டுக்கதையல்லாத பண்டைப் பெருநூல்களிற் கண்ட அருங்கதைகளைச் சான்றுகாட்டி, குறளையும் அதன் உரை களையும் விளக்கிக்காட்டும் திறன் பெரிதும் பாராட்டத்தக்க தாகும். இங்ஙனம் ஒவ்வொரு குறளுக்கும் ஒரு கதை — சில விடங்களில் இரண்டு மூன்று கூட — காட்டிச் செல்லுமிடத்து, அக்கதைகளைக் குறளொடும் அதன் உரையொடும் பொருத்திக் காட்டக் கவிராயர் அவர்கள் கொண்டுள்ள முயற்சிகள் ஊன்றி நோக்குவார்க்கு வியப்பினைத் தருவனவாகும். இப்பெருந்தொண்டு இனிது கைகூடிமுற்ற உதவி புரிந்து வருதல் தமிழகத்தின் கடமையாகும். தெள்ளிய குறள்களையும் கதைகளையும் கொண்ட சில பகுதியைத் திரட்டிச் சிறுசிறு நூலாக்கிப் பள்ளிக்கூட மாணவர்கட்கு உதவிப் பாடமாக்கின் இருபாலார்க்கும் பெரு நலன் விளையுமென்பது எமது கருத்து.